விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Sri Lanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 05 திங்கட்கிழமை (18.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 089

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## அரசின் பரிசீலனை அறிக்கை ஏற்கப்பட்டதே வெற்றிதான்

### அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் தனது மனித உரிமைகள் தொடர்பான பரிசீலனை அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது தனக்குக் கிடைத்த வெற்றி என்று இலங்கை



மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை அமைச்சரும், இலங்கையின் மனித உரிமைகள் தூதருமான மகிந்த சமரசிங்க கூறுகையில்,

ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பாக காலமுறை ஆய்வு நடைபெற்றது.

இதில் இலங்கை சமர்ப்பித்த மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை எந்த எதிர்ப்பும் இன்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த சீனா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று அடுத்த மாத முற்பகுதியில் சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளது.

சீனாவில் சுமார் ஐந்து நாட்கள் தங்கவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான உயர் மட்டக்குழு, அந்த நாட்டின் ஜனாதிபதி ஜி. ஜின்பிங், பிரதமர் லீ கெகியாங் ஆகியோர் உள்ளிட்ட பல்துறை பிரதிநிதிகளை (20ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நாவின் சிபார்சுகளை இலங்கை அவமதிக்கிறது!

## ஜெனிவாவில் குற்றச்சாட்டு

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சிபாரிசுக்களை இலங்கை அரசு புறந்தள்ளி நடக்கின்றது என அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் மனித உரிமைகள் தொடர்பான வருடாந்த பூகோள மீளாய்வுக் கூட்டத்தின்போது கடுமையாகக் குற்றம் சாட்டின.**

முதலில் கருத்து வெளியிட்ட பிரிட்டன் பிரதிநிதி: இலங்கையில் கருத்துச் சுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்டுள்ளதாகவும், ஊடகவியலாளர்கள் பெரும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிஇருப்பதாகவும்தெரிவித்தார்.

மனிதவுரிமை ஆர்வலர்கள் பாதுகாக்கப்படவேண்டுமெனவும்,நீதித்துறையின்சுதந்திரம்பாதுகாக்கப்படவேண்டும் எனவும், குறிப்பிட்ட அவர் பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட்ட விதம் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அமெரிக் (19ஆம் பக்கம் பார்க்க)


# இறுதி ரவை முடியும்வரை பிரபாகரன் போராடினார்

## சரணடைந்திருந்தால் அவர் அமைச்சராகி இருப்பார் - பொன்சேகா



(சென்னை)

உண்மையில் பிரபாகரன் சரணடைவதாக இருந்தால் அவருக்கு சந்தர்ப்பம் இருந்தது. அப்படி அவர் சரணடைந்திருந்தால் இன்று அமைச்சராகி இருந்திருப்பார். அவர் சரணடையவில்லை. இறுதி ரவை முடியும்வரை போராடுவதற்கு தீர்மானித்திருந்தார். இவ்வாறு முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.



சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் அவர்கள் தீவிரவாதக் குழுக்களாக இருந்தாலும், பிரபாகரன் காட்டியது வீரத்தின் இலட்சணம் என்பதை ஜெனரல் என்ற அடிப்படையில் நான் ஏற்றுக் கொள்கின்றேன். சரணடையும் எண்ணம் எள்ளளவும் இல்லாத மனிதன் என்பதை அவரில் நான் பார்க்கிறேன்.

இறுதிக்கட்டத்தின்போது, நந்திக் கடலின் வடக்குப் பகுதியில் மோதல் இடம்பெற்றது. இந்த மோதலின் போது கிடைத்த சடலங்களில் பிரபாகரனின் சடலமும் இருந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் சரணடைய வேண்டாம் என்று கத்தியதாகவும், அது பிரபாகரனின் குரலாக இருக்கலாம் என்றும் விஜ.ஆர்.ரெஜிமெண்டில் இருந்த ஒரு தமிழ் தெரிந்த இராணுவ அதிகாரி குறிப்பிட்டிருந்தார்.

அது பிரபாகரனின் குரலாக இருக்க வேண்டுமென்று நான் கருதுகின்றேன். எனவே சரணடையும் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. 17-ம் திகதி முதல் 19-ம் திகதி (19ஆம் பக்கம் பார்க்க)

# உயர்ந்த மனிதர் கொழும்பில்!



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரும் இலங்கையின் உயர்ந்த மனிதருமான குணசிங்கம் கஜேந்திரன் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயின் வேண்டுகோளின் படி கொழும்பிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

தேசிய கூடைப்பந்து குழுவில் இவரை இணைத்துக் கொள்வதற்காகவே குணசிங்கம் கஜேந்திரன் கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த இவரது உயரம் 7 அடி 3 அங்குலமாகும். இவர் 2009 மே மாதம் 17-ம் திகதி இராணுவத்திரிடம் சரணடைந்து பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். 34 வயதான குணசிங்கம் கஜேந்திரன் நான்கு வயதான ஒருபிள்ளையின் தந்தையுமாவார். (எ-8)

## கலைஞர் கருணாநிதி மீண்டும் எச்சரிக்கை

(சென்னை)

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் திருத்தம் கொண்டுவரப்படவில்லை என்றால் மத்திய அமைச்சரவையில் இருந்து மட்டுமல்ல காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்தே வெளியேறவேண்டிவரும் என்று திமுக தலைவர் கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

(20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா முழுவதும் தீவிரமாக பரவும் இலங்கைக்கு எதிரான போராட்டம்

(சென்னை)

இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் மாணவர்கள் நடத்திவரும் போராட்டங்களை ஆதரித்தும், இலங்கையின் போர்க் குற்றங்களுக்கு பன்னாட்டுவிசாரணையைவலியுறுத்தியும் இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் போராட்டம் பரவியுள்ளது.

கர்நாடகவாழ் தமிழர்களும் நேற்று ஒருநாள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். பெங்களூருவில் தகவல் தொழில்நுட்பத்துறையில் பணிபுரியும் ஏராளமான தமிழக இளைஞர்களும், இளம் பெண்களும் இந்த போராட்டத்தில் பங்கேற்றனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்று போராட்டத்தின் போது இவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், மாகாராஷ்டிர மாநில தலைநகர் மும்பையில் தராவி பகுதியில் உள்ள தமிழர்களும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்பகுதியைச் (19ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கா சமர்ப்பித்ததை இந்திய அரசு ஆதரிக்கும்



## ஜெனிவா தீர்மானம் குறித்து சம்பந்தன்

(கொழும்பு)

ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள இலங்கை மீதான பிரேரணையை இந்தியா நிச்சயம் ஆதரிக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

அத்துடன் அமெரிக்கா உத்தியோகபூர்வமாக சமர்ப்பித்துள்ள பிரேரணையில் சொற்பதங்களில் மாத்திரமே சிறுமாற்றம் செய்யப்பட்டுள்ளதுஎனவும், சாராம்சங்களிலோ அல்லது இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளிலோ எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அரச அதிகாரிகளை விசாரணை செய்ய ம. உரிமை ஆணையாளர் யாழ்.வருகை

## காணாமல் போனோர் குறித்த விசாரணையில் மந்தம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனிதவுரிமை ஆணைக் குழுவின்ஆணையாளர்களில் ஒருவரான முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அரச திணைக்களங்களின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே அவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் இலங்கை மனிதவுரிமை ஆணைக் குழுவின் செயற்பாடுகள் குறித்து காணாமல் போனோரின்உறவினர்கள்விசனம்தெரிவித்துள்ளனர்

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் காணாமல்போனோர் தொடர்பிலும், சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், மீள்குடியேற்றப் பிரச்சினைகள் என்பன தொடர்பிலும் பல்வேறு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நீண்ட காலம் ஆகிவிட்டன. ஆனால் அவை குறித்து எந்தவிதமான உருப்படியான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை .

ஆனால் சாதாரண பிரச்சினைகளான ஆசிரியர் இடமாற்றம், சம்பள முரண்பாடு, ஆசிரியர்களுக்கிடையிலான முரண்பாடுகள் என்பன தொடர்பானவற்றையே மனிதவுரிமை ஆணைக்குழு விசாரணை செய்து வருகிறது.

இதனால் மனிதவுரிமை ஆணைக்குழுவின் விசாரணைகளில் நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளதாகவும் காணாமல்போனோரின் உறவினர்கள் குற்றஞ்சாடியுள்ளனர்.(எ-8)

# அரசுக்கு சார்பாக ஆர்ப்பாட்டம்




அரசுக்கு சார்பாக வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. ஜெனிவா பிரேணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்பேரணி இடம் பெற்றிருந்தது

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தால் மனிவுரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வருவதை கண்டித்தும் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வருகின்ற பிரேணைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டு வவுனியா கச்சேரியில் மகஜரும் வழங்கப்பட்டது.

இப்பேரணியில் ஸ்ரீரெலோ தலைவர் உதயராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமதிபாலா, ஜோன் செனவிரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-250)

# இந்திய இராணுவத்தினரால் வடக்கில் போர் ஆயுதமாக பயன்பட்ட வெள்ளைப் பூரான்

2002-2003ஆம் ஆண்டுகளில் யாழில் மரணப்பீதியைஏற்படுத்தி பலரின் உயிரைக் குடித்த வெள்ளைப்பூரான் (தேள்) இந்திய அமைதிப்படையினராலேயே மிக இரகசியமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனைப் புலிகள் தமது போர் ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளனர் என யுத்தம் தொடர்பான இலங்கையின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வெள்ளைப்பூரான் மீண்டும் யாழ்ப்பாணத்தின் சில பாகங்களில் தற்போது இனங்காணப்பட்டுள்ளது என பேராதனை பல்கலைக்கழக உயிரியல், விஞ்ஞான, வைத்தியபீடமற்றும்யாழ்.சிறுவர்வைத்தியசாலை அதிகாரிகள் ஆய்வினூடாகக் கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.பலாலி, காரைநகர், அச்சுவேலி மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இந்த வெள்ளப்பூரான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டுகளில் இலங்கை வந்த இந்திய அமைதிப்படையினர் 1990 ஆம் ஆண்டில் மறுபடியும் இந்தியா திரும்பினர். இவர்கள் இந்தியா திரும்பியதை அடுத்து 1991ஆம் ஆண்டின் பின்ரே இந்த வெள்ளைப்பூரான் இனங்காணப்பட்டுள்ளது என்றும், இந்த வெள்ளைப்பூரான் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும் காணக்கூடியதாக இருக்கும் என்றும் ஆய்வாளாகள் தெரிவித்துள்ளனர்.

1980 களில் இலங்கையில் இல்லாத வெள்ளைப் பூரான் 1990 ஆம் ஆண்டின் பின்னர் எவ்வாறு உருவாகியது? எனவே இந்திய அமைதிப் படையினர்தான் இந்த வெள்ளைப் பூரானை இலங்கைக்குள் கொண்டு வந்துள்ளனர் என்றும், இதை விடுதலைப் புலிகள் தமது போர் ஆயுதமாக பயன்படுத்தினர் என்றும் போர் தொடர்பான இலங்கையின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹெட்டென்டொட்டா டெமலுஸ் என்ற விஞ்ஞானப் பெயர் கொண்டு அழைக்கப்படும் இந்த வெள்ளைப் பூரான் கடந்த ஒரு வருடத்தில் மட்டும் யாழில் 80 பேரைத் தீண்டியுள்ளது. இவர்களுள் 30 வீதமானோர் சிறார்கள் என்று ஆய்வுகளினூடாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2006, 2007, 2009 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இந்த வெள்ளைப் பூரான் தீண்டுதலால் ஒவ்வொரு மரணம் இடம்பெற்றுள்ள போதிலும், கடந்த 2003ஆம் ஆண்டு காலப் பகுதியில் 12 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வெள்ளைப்பூரான் தீண்டியதை அடுத்து 24 மணித்தியாலயத்திற்குள் உரிய வைத்திய சிகிச்சையளிக்க வேண்டும்.

அவ் வாறில்லாத பட்சத்திலேயே மரணம் நிகழ்க்கின்றது.

2003ஆம்ஆண்டு யாழ். மாவட் டத்தில் 12 சிறார்கள் உயிரிழந்தமைக்கு இதுதான் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-8)







**சிங்கள ஆங்கில வகுப்புகள்**

A/L பரீட்சை முடித்தவர்கள்,
பல்கலைக்கழக மாணவர்கள்,
அரசதுறை உத்தியோகத்தர்கள்,
தனியார்துறை உத்தியோகத்தர்கள்,
ஆகியோருக்கான விசேட டிப்ளோமா சிங்கள, ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.
அடிப்படை விளக்கம், இலவச பயிற்சிக் குறிப்புகள்.
L.S.R.W திறன் பயிற்சி வழங்கப்படும்.
மூன்றே மாதங்களில் சிங்கள, ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக் கொள்ள விரும்புவர்களுக்கான பயிற்சி.

பிரபல ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
DURATION 6 MONTHS (WEEK DAYS & WEEK END)

NORTH LEAD 328, Stanly Road, Jaffna. ஆரியகுளம் சந்திக்கு அருகில்
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460



**பிள்ளையார் இன்**

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



**யா/சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**
**நீர்வேலி**

**இல்ல மெய்வல்லுநர் போட்டி -2013**

எமது பாடசாலையின் பிற்போடப்பட்ட
மெய்வல்லுநர் போட்டி 18.03.2013 (இன்று)
திங்கட்கிழமை நடைபெறும்.
அன்புடன் அழைக்கின்றோம்.


## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு அ.மி.த.க வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளை 19ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி யோ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) இ.குணநாயகம் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேச சபை தவிசாளர் எஸ்.சிவராசா, வேலணை கோட்டக் கல்வி அலுவலர் பொ. சிவானந்தராஜா ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (எ)

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பிற்போடப்பட்ட இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை அதிபர் எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர்(அபிவிருத்திப் பிரிவு)பொ. அருணகிரிநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (அ)


**A/L வரலாறு**

யாழ்.மாணவர்களின் தொடர்ச்சியான சாதனை மிக்க பெறுபேற்றிற்கு உதவி வரும் உங்கள் ஆசான்
**M.பத்மன்** MA(History)
அவர்களின் வகுப்புகள் நடைபெறும் இடங்கள்:
DMI உயர் கலைக்கல்லூரி புகழ் கல்வி நிலையம்
யாழ்.நகர் குளப்பிட்டிச் சந்தி மானிப்பாய்
❁ இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக A/L 2013 மற்றும் Day Class புதிய அனுமதிகள் 30.03.2013 உடன் நிறுத்தப்படும்.
❁ A/L 2014 மற்றும் A/L 2015 வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
C-2730)



**சிவபூசை செய்யக்கூடிய சைவத் துறவிகள் தேவை**

தீவகத்தில் சிவாலயம் ஒன்றில் தங்கியிருந்து பூசை வழிபாடு செய்யக்கூடிய சைவத் துறவிகள் தேவை.
ஒன்றுக்கு மேற்பட்ட துறவிகள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் துறவறசபை அமைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான வசதிகளும் வழங்கப்படும்.
பொருத்தமானோர் தொலைபேசி இலக்கம் (இருப்பின்) மற்றும் தபால் முகவரி அடங்கிய சுயவிபரத்தை:

விளம்பர இல:- C-2732
மே/பா: வலம்புரி
இல 3, 2-ம் ஒழுங்கை.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும்.

- ஆலய நிர்வாக சபை



**காணி, வீடு விற்பனைக்கு**

வீடு — **நல்லூர்**
நல்லூர் கோயில் வீதியில் 1 பரப்பு காணியுடன் சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு விற்பனைக்குண்டு.

காணி — **நெல்லியடி**
நெல்லியடி மத்திய கல்லூரிக்கு அண்மையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

காணி — **கொக்குவில்**
யாழ்.மருத்துவ பீடத்தில் இருந்து 300 m தொலைவில் நெல்லியடி ஒழுங்கையில் 2பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

காணி — **உடுவில்**
உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு அண்மையில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D. பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603. 0215684810


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனம் ஏமாற்றும்

ஒரு ஊரிலே புகழ்பெற்ற பத்திரிகையாளர் இருந்தார். அவர் ஒருநாள் திடீரென இறந்து போனார். அதன்பின் நேராக சொர்க்கத்துக்குப் போனார். சொர்க்கத்தின் வாசலிலே நின்ற சென்.பீற்றர் அவரைத் தடுத்து நிறுத்தினார்.

''இதோ பார்; ஏற்கனவே இங்கே 12 பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களே இங்கு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் சொர்க்கத்திலே திடுக்கிடும் செய்திகள் என்ன இருக்கப் போகிறது. இங்கே அனைத்தும் சீராக இடம் பெற்று நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், பத்திரிகைகளுக்கு சுவாரசியமான கொலை, கொள்ளை, தீ வைப்பு இது மாதிரியான செய்திகள் எதுவும் இங்கே இல்லை.

ஏற்கனவே இங்கே இருக்கிறவர்கள் அனைவரும் மரத்தடியிலே அமர்ந்திருந்து தியானம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒரே செய்திதான் தினமும் இங்கே செய்தியாக வந்து கொண்டிருக்கிறது. அதைப்படிக்க இங்கே எவருமில்லை. ஆதலால் நீ நரகத்திற்குப் போ; அங்கேதான் எவ்வளவோ நடந்து கொண்டிருக்கிறது. அங்கே தான் அதிகளவான பத்திரிகையாளர்கள் தேவைப்படுகிறார்கள். அங்கே உனக்கு நிறைய வேலை இருக்கும்; மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும்'' என்றார்.

பத்திரிகையாளர் சற்று யோசனை செய்தார். இவருக்கு சொர்க்கத்திலேயே இருக்க வேண்டும் என்றுதான் ஆசை. அதனால் வாயிலில் நின்றவரின் அருகில் சென்று, ''ஐயா... என்னை ஒரு 24 மணி நேரம் இங்கே உள்ளே இருப்பதற்கு அனுமதி வழங்குங்கள். உள்ளே இருக்கும் பல பத்திரிகையாளர்களை எனக்குத் தெரியும். அவர்களில் சில பேரை சமாதானப்படுத்தி மெதுவாக நரகத்துக்கு அனுப்பி வைத்துவிட்டு, நான் இங்கேயே இருக்கிறேன். உங்கள் கணக்குப்படி 12 பேரைத்தாண்டாது'' என்றார்.

''சரி... என்று சொல்லிவிட்டு பத்திரிகையாளரை உள்ளே செல்ல அனுமதித்தார்.

உள்ளே சென்ற பத்திரிகையாளர் ஒரு பெரிய புரளியை சொர்க்கத்தில் கிளப்பி விட்டார்.

சக பத்திரிகையாளர்களையும் அழைத்து, நரகத்திலே ஒரு பெரிய தினசரி பத்திரிகையைக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளோம். அதற்கு பல அதிகாரிகள் தேவையாகவுள்ளனர். கை நிறைய சம்பளம் கிடைக்கும். ஆசைப்படுபவர்கள் போகலாம்'' என்ற பெரிய புரளியை ஏற்படுத்தினார்.

24 மணி நேரம் சென்ற நிலையில், வாசல் பக்கம் போனார். பத்திரிகையாளர் அங்கே இருந்தவரிடம் ''எத்தனை பேர் வெளியேறினார்கள்?'' என்று விசாரித்தார்.

''நீ கூறிய செய்தியைக் கேட்டதும் சொர்க்கத்தில் இருந்த அனைத்தும் பத்திரிகையாளர்களும் நரகத்திற்கு போய் விட்டார்கள். உள்ளே யாரும் இல்லை. ஆதலால் நீ உள்ளே இருக்கலாம்'' என்றார்.

இதைக் கேட்டதும் இந்தப் பத்திரிகையாளர் குழம்பி விட்டார். ஒரு வேளை, நரகத்தில் புதிதாக பத்திரிகை ஏதேனும் ஆரம்பித்து விட்டார்களோ...?'' என்று நினைத்தார்.

''ஐயா என்னையும் நரகத்திற்கு விட்டு விடுங்கள். அங்கே ஏதோ விசேடம் இருக்கிறது. என்னைத் தடுக்காதீர்கள்'' என்று கெஞ்சினார்.

பிறரை ஏமாற்றிய அவரது மனம் கடைசியிலே அவரையே ஏமாற்ற ஆரம்பித்து விட்டது.

நீங்கள் இப்படி பிறரை ஏமாற்ற உங்கள் மனதை பழக்கப்படுத்துகிறீர்கள். ஆனால், கடைசியிலே அதனாலே நீங்களே ஏமாற்றப்படுகிறீர்கள்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# கரும்பு செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டது

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதியில் கரும்புச் செய்கையில் ஈடுபடுவோர்களுக்கு ஊக்குவிப்பு நிதியுதவி நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. அக்கராயன் ,ஸ்கந்தபுரம் ,ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 23 கரும்புச் செய்கையாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா நிதியுதவி காசோலைகள் மூலமாக வழங்கப்பட்டன.

மேலும் இவர்களுக்கு இலவசமாக கிருமிநாசினியும் பசளையும் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரும்பு ஆராய்ச்சிசபையின் அனுசரணையுடன் கரும்புச் செய்கையை மேற்கொள்வதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய கரும்புச் செய்கையில் ஈடுபடுகின்ற பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கரும்பு உற்பத்தி தொடர்பான பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இதற்கான நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ,கரும்பு ஆராய்ச்சி சபையின் தலைவர் சிறில்சுது வெல்ல, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கரும்பு ஆராய்ச்சி சபையின் தலைவர் சிறில் சுதுவெல்ல உரையாற்றுகையில்,

இந்நடிக்கையின் முதற்கட்ட மாக கடந்த வருடம் கண்ணகை புரத்தில் 7 பயனாளிகள் தெரிவு செய் யப்பட்டு அவர்களுக்கு உள்ளீடுகளும் பசளை மருந்து உள்ளிட்ட விளைச்சலுக்கான பொருட்களும் இலவசமாக வழங்கப்பட்டன. அத்துடன் நிலப் பண்படுத்தலுக்காக தலா பத்தாயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டது.

இப் பயனாளிகளினால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்ட கரும்புச் செய்கையின் விளைவாகப் பெறப்பட்ட உள்ளீடுகளை பயன்படுத்தி மேலும் ஒரு தொகுதி உற்பத்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்திட்டமானது உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்ட உள்ளீடுகளைக் கொண்டு மேலும் கரும்பு உற்பத்தியாளர்களைத்தெரிவு செய்து அவர்களையும் கரும்புச் செய்கையில் ஈடுபடுத்துவதேயாகும்.

இதற்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது. இவ்வாறு சுமார் 100 பயனாளிகளை கரும்புச்செய்கையில்தொடர்ச்சியாக ஈடுபடுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதனடிப்படையில் இத் திட்டம் எதிர்பார்க்கின்ற இலக்கை எட்டுகின்ற நிலையில் இப்ப குதியில் சீனி ஆலையொன்றை அமைப்பதற்கான மூலப் பொரு ட்களை பெற்றுக் கொள்ள முடியும். இச்சாதகத்தன்மையைப் பயன்படுத்தி சீனி ஆலையினை அமைப்பதே இத் திட்டத்தின் இறுதி இலக்காகவும் அமையும் என்றார். (அ)

# பல்லவராயன் கட்டு வீதி படுமோசமாக சேதம்

(சிவநகர்

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிரான்சி கிராமத்திற்கு செல்லும் முகப்பு இடமாகிய பல்லவராயன் கட்டு பகுதியில் உள்ள வீதி மிகவும் பழுந்தடைந்த நிலையில் உள்ளது.

இவ்வீதியல் செல்லுகின்ற பாரவூர்திகள் மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணிப்போர் சேறும் சுரியுமாக உள்ள இந்த இடத்திலே பயணிப்பதில் மிகவும் சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் இப் பாதை சீர் செய்யபடாமையை இட்டு கவலை தெரிவிப்பதுடன் இதனை விரைவில் திருத்தம் செய்து மக்களின் போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென்று கோரிக்கையும் விடுக்கின்றனர். (அ-3-254)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 200 | 130 |
| தக்காளி | 60 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 40 | 40 | 60 | 60 |
| கரட் | 100 | 120 | 140 | 100 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 40 | 70 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 80 | 60-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 120 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 90 | 70 | 100 | 80 |
| பயற்றங்காய் | 90 | 110 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 100 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 100 | 100 |
| கறிமிளகாய் | 100-120 | 70 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 500 | 600 |
| போஞ்சி | 120 | 90 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 90 | 80 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 50 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 50 | 35-45* |
| இராசவள்ளி | 80-120 | 100 | 120 | 100 |
| வெங்காயபபூ | 100-130 | 160 | 180 | 160 |

# இராசி பலன்

*18.03.2013*
*(பங்குனி 05, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு*
*சஷ்டி காலை 7.32 மணிவரை*
*ரோகினி முன்னிரவு 10.51 மணிவரை*
*இராகுகாலம் 7.48-9.18 மணிவரை*
*சுபநேரம் 12.18-1.48 மணிவரை*
*முதலாம் பங்குனித் திங்கள்*

**மேடம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செலவுகள் அதிகரிக்கும்.

**இடபம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வார்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மிதுனம்** எங்காவது வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்கலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சஞ்சலங்கள் கூடும், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.

**சிங்கம்** உற்சாகத்துடன் பணிபுரிந்து பிறரது பாராட்டுகளைப் பெறுவீர்கள், தொட்ட காரியம் துளிர்விடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், ஆன்றோர் சந்திப்புண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** வரவும் செலவும் சமமாகும் நாள், கவனக் குறைவால் சில பொரு ட்கள் விரயமாகலாம், குடும்பத்தில் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் அமைதி கிடைக்கும், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**விருச்சிகம்** வருமானம் திருப்திதரும், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், உறவினர் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், கௌரவமான நாள், போசன நன்மையுண்டு.

**தனுசு** தேகநலனில் முன்னேற்றகரமான நாள், ஆற்றல்மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**மகரம்** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரும், வசதி, வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**கும்பம்** மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**மீனம்** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும் நாள், வருமானம் திருப்தி தரும், முயற்சிகள் கைகூடும், நீண்ட நாளைய பிணக்குகள் நல்ல முடிவுக்கு வரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 நிதி நிறுவனங்கள் இன்னமும் பட்டியலிடவில்லை

பதிவு செய்யப்பட்ட 47 நிதி நிறுவனங்களில் இன்னமும் 13 நிதி நிறுவனங்கள் தம்மை கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல் இடவில்லை என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

குறித்த கம்பனிகளின் நிதி சார் செயற்பாடுகளை கருத்தில் கொண்டு பங்குச்சந்தையில் பட்டியலிடுவதற்கான கால எல்லையை தாம் நீடித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஆயினும் அறிவிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் தம்மைப் பட்டியல் இடுவதற்கு தவறிய நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் தாம் தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஏசியன் பினான்ஸ் லிமிட்டட், சிட்டி பினான்ஸ் கோப்பரேஷன், தேஷோதய டிவலம்மன்ட் பினான்ஸ் லிமிட்டட், ஈஜரி பினான்ஸ் லிமிட்டட், ஐடியல் பினான்ஸ் லிமிட்டட், கன்ரிச் பினான்ஸ் லிமிட்டட், மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிட்டட், எம்சிஎஸ்எல் பினான்ஸியல் சேர்விஸ் லிமிட்டட், பிரைம் கிராமீன் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டட், றிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிட்டட், த ஸ்டான்ர்ட் கிரெடிட் பினான்ஸ் லிமிட்டட், டிகேஎஸ் பினான்ஸ் லிமிட்டட், மற்றும் யுபி பினான்ஸ் லிமிட்டட் போன்றன இவ்வாறு பட்டியலிடப்படாத நிதி சார் நிறுவனங்களாகும்.

எதிர்வரும் 3 ஆண்டு காலப் பகுதிகளுக்கு மத்திய வங்கியின் மூலம் நிதிசார் நிறுவனங்களுக்குரிய செயற்பாட்டுச் சான்று அநாவசியமாக வழங்கப்படமாட்டாது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# தங்கத்தின் விலை குறைவது ஏன்?

உலக சந்தையில் தங்கத்தின் விலை குறைந்து வருகிறது.

கடந்த 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை கிட்டத்தட்ட 1,900 டொலர்கள் என்ற அளவிற்குச் சென்றது. தற்போது அது 1,600 டொலர்களுக்கும் கீழே உள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து மேல்நோக்கிச் சென்று கொண்டிருந்த தங்கத்தின் விலை இந்த ஆண்டு குறைய ஆரம்பித்துள்ளது.

ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இதுவரை தங்கத்தின் விலை சுமார் 6 சதவீதம் சர்வதேச சந்தையில் குறைந்துவிட்டது.

அதேநேரம் உலக அரசியலில் போர் போன்ற மாற்றங்கள் ஏற்பட்



பல்தங்கத்தின்விலைமீண்டும்உயரும்.

அத்துடன் குறைந்த விலைக்கு தங்கத்தை வாங்கிய முதலீட்டாளர்கள் தற்போது தங்கத்தை விற்று லாபமடைந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவில் மத மற்றும் கலாசார தேவைகளுக்காக தங்கம் பெரியளவில் வாங்கப்படுகிறது.

இதேவேளை பூட்டிவைக்கப்படும் தங்கத்தால்எவ்விதபொருளாதாரபயன்களும் ஏற்படப் போவதில்லை என்ற குரல்கள் எழுவது குறிப்பிடத்தக்கது.

# செலான் வங்கியின் வரிக்கு முன்பான இலாபமாக ரூ.3.18 பில்லியன் பதிவு!

செலான் வங்கியானது, 2012 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிபடைந்த 12 மாத காலப் பகுதியில் வருமான வரிக்கு முன்னரான இலாபமாக ரூ.3.184 பில்லியனைக் பெற்றுக்கொண்டதன் மூலம் மனம் கவரத்தக்க நிதிப்பெறுபேறுகளை பதிவு செய்துள்ளது.

வங்கியின் வரலாற்றில் முதற் தடவையாக வரிக்குப் பின்னரான இலாபம்ரூ.2பில்லியனையும்தாண்டிச் சென்றதுடன், இதன் பெறுமதி ரூபா 2049பில்லியனாகபதிவுசெய்யப்பட்டது.

கடன் வளர்ச்சி தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் வட்டி எல்லைகள் மீதான துறைசார் அழுத்தம் போன்றவற்றிற்கு மத்தியிலும், 2012இல் முடிபடைந்த 12 மாதங்களில் வங்கியின் தேறிய வட்டி வருமானம் 4.76 வீதத்தினால் அதிகரித்து ரூபா 9.020 பில்லியனாகியுள்ளது. தரப்படுத்தப்பட்ட முற்பணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சியின் பயனாக இந்த அதிகரிப்பு எட்டப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டில் தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் ரூபா 1.434 பில்லியனில் இருந்து ரூபா 1.694 பில்லியனாக அதிகரித்துள்ளது. இறக்குமதி சார்ந்த செயற்பாடுகளில் ஒட்டுமொத்தமான வீழ்ச்சி காணப்பட்ட நிலையிலும், ஏனைய பல வர்த்தகங்கள் மற்றும் கட்டண வருமானம் உழைத்துத் தரும் சேவைகளில் செலான்வங்கிதமது நடவடிக்கைகளை பரவலாக்கியதன் மூலமாகவே இவ் அதிகரிப்பை அடைந்தது.

கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் அமைந்துள்ள வங்கியின் கட்டிடங்கள் தொடர்பில் அதிகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கமைய குறிப்பிட்ட கிளைக் கட்டிடங்கள் கேந்திர முக்கியத்துவம் மிக்க பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டன. செலவுச் செயற்திறன்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக இவ்வருட இறுதிநிதிப்பெறுபேறுகளில் நேரடியாகவே முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதை தெளிவாக காணக் கூடியதாகவுள்ளது.

செலான் வங்கியின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஹால் ஜயமான்ன கருத்துத் தெரிவிக்கையில், நாம் முன்னெடுக்கும் உபாய ரீதியிலான செயற்பாடுகள், எம்மால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை உழைத்துத் தருவதற்கு ஆரம்பித்துள்ளன என்பதை இந்த நிதிப் பெறுபேறுகள் நிரூபிக்கின்ற அதேவேளை, ஸ்திரமான வளர்ச்சியை வங்கியானது அடைந்து கொள்வதற்கு ஏதுவான மிகச் சிறந்ததொரு அடித்தளத்தையும் எமக்கு வழங்கியுள்ளது என்று கூறினார்.

2012-ம் ஆண்டு காலப் பகுதியில் செலான் வங்கியானது 15 புதிய கிளைகள் / சொகுசு வங்கிச் சேவை நிலையங்களை திறந்து வைத்துள்ளதுடன் 17 கிளைகள்/ சொகுசு வங்கிச் சேவை நிலையங்களை புதுப்பொலிவுடன் புதுப்பித்துள்ளது.

அது மட்டுமன்றி ஏனைய பல கிளைகளும் வாடிக்கையாளருக்கு நட்புறவான அமைவிடங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளன. 2012 டிசம்பர் 31ம் திகதியன்று இருந்தவாறு 147 கிளைகளையும் ,154 ஏரிஎம் மையங்களையும், 81 மாணவர் சேமிப்பு நிலையங்களையும் செலான் வங்கியின் வலையமைப்பு உள்ளடக்கியுள்ளது.

# 62 % வளர்ச்சியுடன் சாதனைமிகு இலாபத்தை பெற்றுள்ள ஜனசக்தி

ஜனசக்தி இன்சூரன்ஸ் பி.எல்.சி. நிறுவனமானது, 2012-ம் ஆண்டில் மொத்தத் தேறிய வருமானமாக ரூபாய் 8 பில்லியனையும் தாண்டிய – அதாவது ரூபாய் 8.26 பில்லியனைப் பெற்றுக் கொண்டதன் மூலம் இவ்வருடத்தில் சாதனைமிகு இலாபத்தை பதிவு செய்துள்ளதுடன் 62 சதவீத வளர்ச்சியொன்றை பிரதிபலித்தது. காப்புறுதி துறைசார் சந்தை ஆதிக்கத்தில் ஜனசக்தி நிறுவனத்தின் ஒன்றுசேர்ந்த இயக்க நிலையை வெளிப்படுத்துவதாக இது காணப்படுகின்றது.

மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகள் குறைவடைந்தமை, நாணயமாற்று வீதங்களில் மதிப்பிறக்கம், உயர்ந்த மட்டத்திலான வட்டி வீதங்கள் ஆகியவற்றின் விளைவாக மோட்டார் வாகனங்களைப் பொறுத்தமட்டில் கடினமானதொரு வருடமாக 2012 காணப்பட்ட நிலையிலேயே மேற்படி நிதிப் பெறுபேறுகள் அதிகரித்துள்ளன.

வாகன இறக்குமதித்தீர்வைகளின் அதிகரிப்புக்கு மத்தியில் மோட்டார் வாகனங்களின் பதிவு 40 வீதத்தினால் வீழ்ச்சி கண்டிருந்த சூழலிலேயே ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் வாகனக் காப்புறுதியானது 14 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து ரூபாய் 4 பில்லியனாகியுள்ளது. அதேநேரம் காப்புறுதிகளில் இருந்தான இலாபம் ரூபாய் 2130 மில்லியனாக அதிகரித்ததுடன், இது 11 சதவீத வளர்ச்சியை பிரதிபலிக்கின்றது.

ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அதன் தலைவர் டபிள்யூ. ரி.எல்லாவல கருத்துத் தெரிவிக்கையில், வர்த்தகம் சார் வளர்ச்சியை முன்கொண்டு செல்வதில் காணப்படும் பாரிய பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பில் விபரித்ததுடன், எவ்வாறிருந்த போதிலும் அதனைச் சரியாக மேற் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

100ற்கும் அதிகமான கிளை வலையமைப்பு, நாடளாவிய ரீதியில் பணியாற்றும் 273 மோட்டார் வாகன மதிப்பீட்டாளர்கள், குறித்த பிரிவில் தனிச்சிறப்புமிக்க வாகன நிலையம் மற்றும் 24 மணி நேர அழைப்பு நிலைய வசதி ஆகியவை அந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த போட்டிகர சந்தை ஸ்தானத்தை பலப்படுத்தியுள்ளன.

# வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கு கொ/வு ஆர்வம் தொடர்கிறது

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கு கொள்வனவு தொடர்பான ஆர்வம் பங்குச்சந்தையில் அதிகளவு கடந்த வாரம் அவதானிக்க முடிந்தது. விசேடமாக கொமர்ஷல் வங்கி , ஜோன் கீல்ஸ், சிலோன் டுபாக்கோ போன்ற நிறுவனங்களின் பங்குகளில் அதிகளவு ஆர்வத்தை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளிப்படுத்தியிருந் தனர்.

மேலும் தேசிய அபிவிருத்தி வங்கியின் பங்குகள் மீதான நாட்டமும் கடந்த வாரம் அதிகளவில் காணப்பட்டது. மிகப்பெரிய அளவிலான பங்கிலாப அறிவித்தலை தேசிய அபிவிருத்தி வங்கி வெளியிடும் என்ற எதிர்பார்ப்பு பங்குதாரர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 5,691.39 ஆகவும், எஸ் அன்ட் பி லங்கா 20 சுட்டி 3222.74 ஆகவும் அமைந்திருந்தன.

மார்ச் 11-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்தப்புரள்வு பெறுமதியாக ரூ. 3,014,259,096 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக 21,187 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 19,837 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 1,350 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் ஆசிரி சேர்ஜி, மேர்க் சிப்பிங், சிலோன் ரீ புரோக்கர்ஸ், கொம்.லீசிங் அன்ட் ஃபினான்ஸ் மற்றும் மெட்.ரெஸ். ஹொரல் போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

என்வி றிசோர்சஸ் (உரிமைப் பங்குகள்)(1.30), சிலோன் லெதர் (உரிமைப் பங்குகள்), பிசி ஹவுஸ் மற்றும் என்வி றிசோர்சஸ்( உரிமைப் பங்குகள்) (2.10) போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாக பதிவாகியிரு ந்தன.

# நாணயக்குற்றி தயாரிப்பு மற்றும் விநியோகத்துக்காக புதிய ஒப்பந்தம்



இலங்கையில் நாணயக்குற்றி தயாரிப்பு மற்றும் விநியோகிப்பதற்கான புதிய ஒப்பந்தமொன்றில் பின்லாந்தின், ரோயல் டச் மின்ட் ஒஃப் பின்லாண்ட் நிறுவனத்துடனும், ஸ்லோவாக்கியாவின் மின்கொவ்னா கிரெம்னிகா நிறுவனத்துடனும் இலங்கை மத்திய வங்கி ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2013-2015 வரையிலான காலப்பகுதியில் தற்போது அமுலிலுள்ள 1 ரூபா, 2 ரூபா, 5 ரூபா மற்றும் 10 ரூபா நாணயங்களுக்கு நிகரான புதிய நாணயங்களை தயாரித்து மக்கள் பாவனைக்காக வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளது.

அத்துடன், தற்போது மக்கள் பாவனையில் இல்லாமல் வெவ்வேறு பகுதிகளில் முடங்கிக்கிடக்கும் நாணயக்குற்றிகளை அந்த பகுதிகளிலிருந்து மீட்டு, மீண்டும் மக்கள் பாவனைக்காக வழங்கும் வகையிலான நடவடிக்கையும் மத்திய வங்கி மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 124.75 | 127.90 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 187.80 | 193.45 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.52 | 167.06 |
| சுவிஸ் பிராங் | 130.88 | 135.82 |
| கனேடிய டொலர் | 121.31 | 125.80 |
| அவுஸ்திரேலிய டொலர் | 128.45 | 133.69 |
| சிங்கப்பூர் டொலர் | 99.34 | 102.89 |
| ஜப்பான் யென் | 1.29 | 1.34 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.33 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.40 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை பாதுகாப்பதற்கு மத்தியரசு கடமைப்பட்டுள்ளது

### கருணாநிதிக்கு ஆறுதல் கூறுகிறார் நாராயணசாமி

இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானம் தொடர்பாக தமிழக மக்களின் உணர்வுகளைக் கவனத்தில் கொண்டு மத் திய அரசு இறுதி முடிவெடிக்கும் என இந்திய மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானத்தில் போர்க் குற்றவாளிகள் மீது சர்வதேச விசாரணை நடத்தி குறிப்பிட்ட கால வரையறைக்குள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற திருத்தத்தை சேர்க்க வேண்டும் என்றும் நிறைவேற்றப்படாத பட்சத்தில் மத்திய அமைச்சரவையில் திமுக நீடிப்பது அர்த்த மற்றதாகி விடும் என்றும் தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்திருந்த நிலையிலே நிருபர்களிடம் கருத்து தெரிவித்த நாராயணசாமி மேற் கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்தில் உள்ள பொதுமக்கள் மற்றும் அரசியில் கட்சிகளுக்கு இது மிகவும் உணர்வு பூர்வமான முக்கியமான பிரச்சினையாகும். எனவே தி.மு.க தலைவர் கருணாநிதி தனது உணர்வுகளை குறிப்பிட்டார். இதில் உள்ள அனைத்து அம்சங்களையும் பிரதமர் மன்மோகன் சிங் நிச்சயமாக பரிசீலனை செய்வார் எனதெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு கடமைப்பட்டுள்ளது என்று பாராளுமன்றத்தில் பிரதமர் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார் எனவும் நாராயணசாமி குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# போலியாக சாரதி உரிமம் தயாரிக்கும் இடம் முற்றுகை

போலி சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் போலியான தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் என்பவற்றை தயாரிக்கும் நிலையமொன்றை சுற்றி வளைத்துள்ள பேலியகொடை மோசடி தடுப்புப் பிரிவினர் 2 சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி கடந்த வெள்ளிக்கிழமை 10.30 மணியளவில் இந்த சுற்றிவளைப்பு தேடுதல் இடம்பெற்றது. வீடொன்றிலே இந்தப் போலி சாரதி அனுமதிப்பத்திரம் தயாரிக்கும் நிலையம் செயற்பட்டு வந்துள்ளது.

சுற்றி வளைப்பின் போது இங்கிருந்து 19 போலி சாரதி அனுமதிப் பத்திரங்களும் 7 தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களும் மீட்கப்படதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவற்றை அச்சிடப் பயன்படுத்தப்படும் கணனி அச்சுப் பிரதி இயந்திரம் மற்றும் போலி ஆவணங்கள் என்பனவும் அங்கிருந்து கண்டுபிடிக்கப்பட்டன. கடவத்தை பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# ஜெனீவாவில் இலங்கை தோற்றால் கண்காணிப்பாளர்கள் வரக்கூடும்

### அமைச்சர் ராஜித ஆரூடம்

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் என சில நாடுகள் இலங்கைக்கு எதிராக கொண்டு வரும் இந்த யோசனையின் நோக்கம் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை இலங்கைக்குள் அனுப்பிவைப்பதற்காகும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை சில மத்திய கிழக்கு நாடுகள், இந்த வாக்கெடுப்பில் எவ்வாறான நிலைப்பாடு, களை எடுக்கும் என்பதை உறுதியாக கூற முடியாது எனவும் இம்முறை வாக்கெடுப்பு இலங்கைக்கு சாதகமாக அமையும் சந்தர்ப்பங்கள் குறைவாக இருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகள் தமக்கு சாதகமான நிலைமை இல்லாத நிலையில் இப்படியான யோசனை கொண்டு வருவது பொருத்தமற்றது. மத்திய கிழக்கைச் சேர்ந்த நாடுகள் சில இலங்கை தொடர்பான அமெரிக்காவின் யோசனை தொடர்பில் காட்டிய மௌனம் இலங்கைக்கு பாதகமாக அமைய வாய்ப்புள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு எதி ரான ஜெனீவாமனிதஉரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ள யோசனை தொடர்பாக அடுத்த வாரம் நடத்தப்பட உள்ள வாக்கெடுப்பில் இலங்கை தோல்வியடைந்தால், வெளிநர்ட்டு கண்காணிப்பாளர்கள் குழு இலங்கைக்கு செல்வதை தடுக்க முடியாது என இராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக் கின்றன. வாக்கெடுப் பில் இலங்கை தோல்வி யடைந்தால், வெளிநாட்டு கண்காணி ப்பாளர்கள் இலங் கைக்குள் செல் வதற்கு சட்டரீதியான சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் தெரிய வருகிறது. (அ)


**Study in MALAYSIA**

**மலேசியாவில் உயர்கல்வி**

மலேசிய அரசாங்கத்தினால் அங்கிகரிக்கபட்ட SAL COLLEGE இனால் நடத்தப்படும்

Hotel Management & Catering Faculty

**Pastry Certificate Course - 1 Year**

- 8 மாதங்கள் "3 Star" Hotel களில் பயிற்சி. மாதாந்த பயிற்சி ஊதியம் வழங்கப்படும்.
- பாடக்கட்டணம் visa பெற்றபின் செலுத்தமுடியும்.
- IELTS தேவையில்லை.
- course முடிவின் பின் மலேசியாவில் வேலை பெறுவதற்கான தகமை.
- மேற்படிப்பிற்காக UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு transfer பெறமுடியும்.
- தகமை: கணிதம், ஆங்கிலம் உற்பட O/L சித்தி.

மார்ச் 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்கமுடியும்.

**Call : 0777-767818**

Mr. Jude James
Scholars Information Center
# 01, Vaverset Place, Wellawatte,
Colombo 06.

(அ/2714)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'7"<br>கி.பா: 36<br>தகைமை/தொழில்: A/L, (Canada- Not PR)<br>தொ.இ: B -379 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:உத்தராடம் 1<br>உயரம்: 5'4"<br>கி.பா: 30.25, 8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BSc<br>தொ.இ: G -355 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>உயரம்: 5'7"<br>கி.பா: 18.5 சூரி, செவ் ஒரே வீட்டில்<br>தகைமை/தொழில்:A/L, வங்கி ஆளணி உதவியாளர் (அரச)<br>தொ.இ: B -385 | பிறப்பு: 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>உயரம்: 5'3"<br>கி.பா: 41.25, 2 இல்செவ்<br>தகைமை/ தொழில்: MBBS Dr<br>தொ.இ: G-359 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா:39.25<br>உயரம்: 5'5"<br>தகைமை/ தொழில்: BSc Degree நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்<br>தொ.இ: B -390 | பிறப்பு: 1983 றோ.க<br>நட்சத்திரம்: பூரம் 1<br>தகைமை/ தொழில்: B.Com ஆங்கில ஆசிரியை, விவாகரத்தானவர்<br>எ.பா: விவாகரத்து ஏற்கப்படும்<br>தொ.இ: G -397 |
| பிறப்பு: 1974 இந்து (இந்திய வம்சாவளி)<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>உயரம்: 5'9"<br>கி.பா: 21.75, 4 இல் சூரி, செவ்<br>தகைமை/தொழில்:MSc (மிருகவைத்திய பட்டம்), பொதுநிர்வாக டிப்ளோமா கால்நடை வைத்தியர்<br>தொ.இ: B -449 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 4,<br>உயரம்:5'5"<br>கி.பா: 85, 8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BSc Computer Engineering (UK Not-PR)<br>தொ.இ: G -447 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி





யாழ்ப்பாணம்

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்
(வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்) புனராவர்த்தன அஷ்ட பந்தன
நவ குண்ட பக்ஷ உத்தம மகா யாக பிரதிஷ்டா

நந்தன வருடம் பங்குனி மாதம் 16 ஆம் நாள் (29.03.2013)

**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 10.46 மணிவரை

பரிவாரத் திருக்கோவில்களுக்கு பங்குனி மாதம் 5 ஆம் நாள் (18.03.2013) திங்கட்கிழமை (இன்று) காலை 6.21 மணிமுதல் 7.21 மணிவரை வேம்படி பிள்ளையார் கோவிலிலும் காலை 9.41 மணிமுதல் 10.41 மணிவரை முத்துமாரியம்மன் கோவிலிலும் நண்பகல் 12.12 மணிமுதல் 12.31 மணிவரை காளிகோவிலிலும் புனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெறும்.

வண்ணை வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்

இங்ஙனம்
திரு.க.வைத்திலிங்கம் செட்டியார்
(பரம்பரை தர்மகர்த்தாவும் உரிமையாளரும் முகாமையாளரும்)

18.03.2013 (2180)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திகை-மருதங்கேணி வீதியை புனரமைக்க கோரிக்கை

(தும்பளை)


பருத்தித்துறை பிரதேச சபைக்கு சொந்தமான மந்திகை மருதங்கேணி வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ளது.

இப்பாதையின் ஊடாக வடமராட்சி கிழக்கை சேர்ந்த மக்கள் வடமராட்சி வடக்கிற்கும் வடமராட்சி வடக்கை சேர்ந்த மக்கள் வடமராட்சி கிழக்கிற்கும் செல்லும் ஒரு பிரதான பாதையாகும்.

மற்றும் வடமராட்சி கிழக்கிலிருந்து வடமராட்சி வடக்கு மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு மணல் விநியோகம் செய்யும் பிரதான பாதையாகவும் அமைந்துள்ளது.

இவ்வீதி மிகவும் குன்றும் குழியுமாக காணப்படுவதால் மழை காலங்களில் நிர் தேங்கி விபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாய நிலை உள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனை கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பார்களா? என மக்கள் காத்திருக்கின்றனர். (அ-3-19)




நன்றி: ஐலண்ட்

## முதலீட்டாளர் தினம்

(சித்தன்கேணி)

CSE முதலீட்டாளர் தினம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் கொழும்பு பங்குச்சந்தை தொடர்பான அறிவூட்டல்கள், கொழும்பு பங்குச் சந்தை பிரதிநிதிகளை சந்தித்தல், பங்குதாரர் நிறுவனங்கள் மற்றும் அலகு பொறுப்பாட்சி நிறுனங்களின் பிரதிநிதிகளை சந்தித்தல் என்பன இடம்பெறவுள்ளன.

எனவே, அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு பங்கு பரிவர்த்தனை நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (அ-3-17)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத் தும் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி முற் பகல் 7 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை, இம்மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு முன்வீதியில் பந்தல் அமைக்கப்படுவதால் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை முதல் 28 ஆம் திகதி வரை குறித்த வீதி மூடப்பட்டு மாற்று வழி பாவனைக்குட்படுத்தப்படும் எனவும் ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-5)

## தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

## நிறுத்தல் கருவிகளுக்கு இன்றும் முத்திரையிடலாம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வியாபாரிகளதும் வர்த்தக நிலையங்களதும் நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கான முத்திரையிடும் பணிகள் இன்று திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, முத்திரையிட தவறியவர்கள் இன்று தமது கருவிகளுக்கு முத்திரையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# வீதி புனரமைப்புக்கு தார் வந்து சேரவில்லை

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்டத்தில் தாருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதனால் வீதி புனரமைப்பு வேலைகள் யாவும் முடங்கி கிடக்கின்றன.

வீதிகளை புனரமைப்பு செய்யும் திணைக்களங்களில் தார் இல்லாத காரணத்தினால் பல வீதிகள் கற்கள் பறிக்கப்பட்டு பல மாதங்களாகியும் வீதி புனரமைக்கப்படாமல் இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் தாருக்காக விண்ணப்பித்தபோதிலும் பல மாதங்களாகியும் தார் வந்து சேரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலும் தாருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தியை கருத்திற் கொண்டு விரைவாக தாரைப் பெற்றுக் கொள்ள ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)

## ஓமந்தை சோதனை சாவடியில் மீன் லொறிகள் நீண்டநேரம் தரிப்பு

(பருத்தித்துறை)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வியாபாரத்திற்காக மீன்களை எடுத்துச் செல்லும் லொறிகளை ஓமந்தை சோதனைச் சாவடியில் நீண்ட நேரமாக தடுத்து வைத்து சோதனையிடுவதால் உரிய நேரத்திற்கு மீன்களை சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு செல்லும் சகல மீன் லொறிகளையும் தடுத்து வைத்து மீன் பெட்டிகளை கீழே இறக்கி ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக சோதனையிடுவதால் உரிய நேரத்திற்கு மீன்களை சந்தைப்படுத்த முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தென்பகுதி மீனவர்கள் உரிய நேரத்திற்கு சென்று மீன் வகைகளை சந்தைப்படுத்துவதால் யாழில் இருந்து செல்லும் மீன் வகைகள் குறைந்த விலைக்கே மீன்களை சந்தைப்படுத்த வேண்டியிருப்பதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-10)

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடலாம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகளது பாவனையில் உள்ள நிறுத்தல் அளவை கருவிகளை முத்திரையிடும் பணி எதிர்வரும் 21, 22 மற்றும் 25 ஆம் திகதிகளில் கொடிகாமத்தில் அமைந்துள்ள பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே, குறிப்பிட்ட வர்த்தக நிலைய மற்றும் வியாபார நிலைய உரிமையாளர்களை தமது நிறுத்தல் மற்றும் அளவை கருவிகளுக்கு முத்திரையிடுமாறு பிரதேச சபை தலைவர் சி.துரைராசா அறிவித்துள்ளார். (அ-3-29)

## சிவபூஜா க்ரம பத்ததி நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையினால் நடத்தப்படும் **சிவபூஜா க்ரம பத்ததி** நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இந்து சமயப் பேரவையின் நடராஜர் மண்டபத்தில் பிரம்ம ஸ்ரீ உ.ரா. உமாநாத தீக்ஷிதர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கான ஆசியுரையினை இந்து சமய பேரவை நடராஜர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.ச.சோமஸ்கந்தக்குருக்கள் வழங்கவுள்ளார்.

தொடக்கவுரையினை யாழ்.இந்து சமய பேரவை தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வழங்கவுள்ளதோடு அறிமுகவுரையினை பேரவையின் செயலாளர் சி.சக்திக்கிரீவன் வழங்க நூல் வெளியீட்டுரையினை சிவஸ்ரீ கணேச.பரமேஸ்வர தீக்ஷிதர் வழங்கவுள்ளார்.

நூலின் முதற் பிரதியினை சர்வானந்தமய பீட அமைப்பாளர் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா பெற்றுக் கொள்ளவுள்ளார். (அ-5)

# கெருடாவிலில் வெங்காய செய்கை மோசமாக பாதிப்பு

(கரணவாய்)


கெருடாவில் தொண்டைமானாறு வெங்காய உற்பத்தி விவசாயிகள் பெய்த கன மழையால் வெங்காய பயிர் அழிவடைந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயத்தையே தமது வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வரும் விவசாயிகள் செங்காயச் செய்கை அழிவடைந்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

பெய்த மழையால் வெங்காயம் அழுகிய நிலையில் களஞ்சியப்படுத்த முடியாத நிலையிலுள்ளது.

வங்கிகளில் கட்ன் பெற்று வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் கடனை திருப்பி செலுத்த முடியாத அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, வங்கிகளில் பெற்ற கடனை திருப்பி செலுத்த கால அவகாசம் தருமாறு அவ் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-60)






வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான விளையாட்டு செயற்பாடுகளினூடாக அபிவிருத்தி செய்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிகாரிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றத்தை வலியுறுத்தாத அறிக்கையை சமர்ப்பித்தது இந்தியா

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கையின் உலக ளாவிய காலமுறை ஆய்வறிக்கை மீது இந்தியா சார்பில் ஒரு அறிக்கையில் தாக்கல் செய்யப்பட்டது.அதில் இலங்கையின் போர்க்குற்றங்களை விசாரிக்குமாறு கோரிக்கை எழுப்பப்படவில்லை.**

ஐ.நாமனித உரிமைகள்பேரவை மாநாடு கடந்த மாதம் 22 ஆம்திகதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் இலங்கை செயற்பாட்டின் மீதான உலகளாவிய காலமுறை ஆய்வறிக்கையை அந்நாட்டின் பிரதிநிதி மகிந்த சமரசிங்க கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்து உரையாற்றினார்.

இலங்கையின் இந்த அறிக்கைக்கு சீனா, பாகிஸ்தான், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் ஆதரவு தெரிவித்து உரையாற்றினர். ஆனால் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பொது மன்னிப்பு சபை பிரதிநிதிகள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இலங்கையின் இந்த காலமுறை ஆய்வறிக்கை மீது இந்தியா சார்பில் ஒரு அறிக்கை தாக்கல் செய்ய பட்டது. அதில் கூறப்பட்டதாவது, 2 ஆவது சுற்று காலமுறை ஆய்வறிக்கை தாக்கல் செய்ததற்காக இலங்கைக்கு நன்றி.

தமிழர் மறுவாழ்வு பணிக்கான குழு (எல்.எல்.ஆர்.சி) பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை இலங்கை ஏற்றதை பாராட்டுகின்றோம்.

அத்துடன் மறுவாழ்வு பணிகள் வடக்கு மாகாணத்தில் படைகளை குறைத்தல் போன்றவற்றையும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சிறப்பாக செயற்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில்நடந்தமனிதஉரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் மற்றும் உயிரிழப்புக்கள் குறித்து சுதந்திரமாகவும் நியாயமாகவும் விசாரணை நடத்தப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழர்கள் மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு பணிகள் வேகமாக நடக்க வேண்டும் என வலி யுறுத்துகிறோம். வரும் செப்டம்பர் மாதத்திற்குள் வடக்கு மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்ற இலங்கையின் உறுதி மொழியை வரவேற்கிறோம்.

இலங்கை அரசியல் சட்டத்தில் உள்ளபடி அனைத்து மக்களும் வாக்களிக்கும் ஜனநா யக கடைமையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

மறுவாழ்வு பணிகள் தொடர்பான பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் இலங்கை வெற்றி பெற வாழ்த்துகின்றோம். அதேபோல் தேசிய புனரமைப்பு பணியில் தீவிரமாக ஈடுபடவும் அரசியல் தீர்வு காணும் பணியை விரைவுபடுத்தும் இலங்கை அரசைவலியுறுத்துகிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்க வேண்டுமென எந்த கோரிக்கையும் அறிக்கையில் இடம்பெறவில்லை. இந் நிலையில் வரும் 20, 21ஆம் திகதிகளில் அமெரிக்காவின் தீர்மானம் தாக்கல் செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கிறது. (அ)



யாழ்.போதனா வைத்தியசாலை அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் நடத்திய அகத்தியர் தேவாரத் திருட்டு முற்றோதல் நிகழ்வு இடம்பெறுவதை படத்தில் காணலாம்.

# சொத்தழிவு நட்டஈட்டைப் பெற காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் அனைத்து துறைகளுக்குமான அரச அலுவலர்களின் சொத்தழிவுகளை பதிவு செய்வதற்கான திகதி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி சொத்தழிவுகளை பதிவு செய்வதற்கான இறுதி திகதி கடந்த மாதம் 28 ஆம் திகதியுடன் முடிவுற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ்இழப்பட்டிற்கு விண்ணப்பிப்பவர்கள் பலதரப்பட்ட ஆவணங்களை ஒப்படைக்க வேண்டி இருந்தமையால் உரிய காலத்தில் பெரும்பாலானோர் விண்ணப்பிக்க முடியாத நிலை உருவாகியது.

இது சம்பந்தமாக மேற்படி சொத்தழிவுகளை பதிவு செய்து நட்ட ஈட்டிற்காக விண்ணப்பிக்கும் திகதியை நீடித்து தருமாறு பத்தி ரிகை வாயிலாகவும் பலதரப்பட்ட அதிகாரிகள் மட்டத்திலும் பாதிப்பட்டவர்களிடம் கோரிக்கைக்காக விடுவிக்கப்பட்டது. இதையடுத்து இக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட புனர்வாழ்வு அமைச்சு எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நட்டஈட்டிற்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லையை நீடித்துள்ளது.

எனவே நீடிக்கப்பட்ட இக்கால எல்லைக்குள் அனைத்து துறை களையும் சேர்ந்த அரச அலுவலர்கள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்து தங்கள் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து தங்கள் திணைக்களங்களின் ஊடாக புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறும்கிளி. மாவட்ட அரசாங்கஅதிபர் மேலும்தெரிவித்துள்ளார். (அ-5-254)

# முல்லையிலிருந்து துணுக்காய்க்கு இ.போ.ச.பேருந்து சேவைகள்

முல்லைத்தீவில் இருந்து துணுக்காய் வரையான இ.போ.ச பேருந்து சேவையானது நீண்டகாலத்திற்கு பின் இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டு யுத்தத்தின் விளைவால் மேற்குறித்த இ.போ.ச.பேருந்து சேவையானது முற்றாக சீர்குலைக்கப்பட்டது.

அனைத்தும் இழந்து தவித்த மக்களுக்கு போக்குவரத்து வசதியும் சீரின்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இலங்கை போக்குவரத்து சபை வடக்கு மாகாண முகாமையாளர் ஏ.அஸ்ஹர், முல்லைத்தீவு சாலை முகாமையாளர் கந்தப்பிள்ளை சிறினிவாசன் ஆகியோர் மேற்கொண்ட விடாமுயற்சியின் பயனாக இப் பேருந்து சேவையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் இருந்து மாலை 4.15 மணிக்கு பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டு ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி ஊடாக இரவு 7.15 மணிக்கு துணுக்காயை வந்தடையவுள்ளது.

மறுநாள் காலை 6 மணிக்கு துணுக்காய் பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பித்து அதே வழியாக காலை 9.15 முல்லைத்தீவை வந்தடையவுள்ளது.

முல்லைத்தீவில் இருந்து துணுக்காய் வரை பயணிப்பதற்கு 128 ரூபாவும் முல்லைத்தீவில் இருந்து மல்லாவி வரை பயணிப்பதற்கு 118 ரூபாவும் முல்லைத்தீவில் இருந்து மாங்குளம் வரைபயணிப்பதற்கு 90 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

நேரமாற்றம் செய்யவேண்டி இருப்பின் முல்லைத்தீவு இ.போ.ச.சாலை முகாமையாளருடனும் அல்லது 0771058190, 0243248271 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொள்ள முடியும். (அ-3-267)

# அரசியல் தஞ்சம் கோரிய முஸ்லிம் மக்களை வெளியேற்ற வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

நீண்ட காலமாக இலங்கையில் தங்கியிருந்து அரபு மொழியை கற்பித்து வரும் சவுதி அரேபிய பிரஜை (மத்ரசா) உடனடியாக நாட்டில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சர் எழுதிய அல். ஜிகாத் –அல்.குவைதா என்ற நூல் வெளியீட்டு விழாவில் உரை யாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

சவுதியில் இருந்து இலங்கை வந்துள்ள 700 பேர் இஸ்லாமிய சமய பள்ளிகளில் கற்பித்து வருகின்றனர். அண்மைகாலமாக நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு இவர்கள் காரணம் என்பது உறுதிப் படுத்தப்பட்டு உள்ளது.

ஹலால் பிரச்சினை மாத்திர மல்லாது முஸ்லிம் பெண்கள் கறுப்பு உடை அணிவதை தீவிரப்படுத்தும் நடவடிக்கை மற்றும் ஏனைய அடிப் படைவாத செயற்பாடுகளுக்கு இந்த மத்ரசாக்களின் தொடர்பு இருக்கின்றது.

மாலைதீவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு நெருக்கடி காரணமாக அந்த நாட்டை சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் தற்போது தெஹிவளை, ரத்மலானை, நுகே கொடை போன்ற பிரதேசங்களுக்கு வந்து வசித்து வருகின்றனர்.அரசியல் தஞ்சம் கோரி வந்துள்ள அவர்கள் எதிர்காலத்தில் இலங்கைக்கு பாரதூரமான பிரச்சினையாக மாறுவார்கள்.

மியன்மார் –பங்களாதேஷ் இடையிலான எல்லைப்பிரச்சினை காரணமாக ஏற்பட்டுள்ள கடும் மோதல்கள் காரணமாக தப்பியோடிய மியன்மார் முஸ்லிம்கள் தற்போது இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரி வந்துள்ளனர்.

இவ்வாறு அரசியல் தஞ்சம் கோரி வந்துள்ள வெளிநாட்டவர்கள் குறித்து கணக்கெடுப்பு ஒன்றை நடத்தி அவர்களை உடனடியாக நாட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்றார். (அ)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# பிறரை நம் சொந்த நலனுக்காய் பயன்படுத்துவதை விட்டுவிடுவோம்



விபச்சாரத்தில் கையும் மெய்யுமாக பிடிபட்ட ஒரு பெண்ணை கொண்டு வந்து இப்படிபட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்கு கொடுத்த கட்டளை. நீர் என்ன சொல்கீறீர்? என்று இயேசுவின் மேல் குற்றம் சுமத்த வேண்டும் என்பதற்காக அவரிடம் இவ்வாறு கேட்டு மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மடக்கி விட சோதித்தார்கள் எனும் வேதாகமத்தில் கூறும் பகுதி இன்று எமக்கு கூறப்படுகின்றது.

வாழ்க்கையிலே வரும் சவால்களைப் பல வழிகளில் சந்திக்கலாம். சவால்களை கண்டதும் ஓடி ஒளித்தல், கோபத்தோடு அவைகளைத் தீர்த்தல், மனநலநிபுணர்கள் இன்னும் பல வழிகளைச் சந்தித்த விதம், சமாளித்த விதம் அழகானது. நன்றி சொல்ல வேண்டும் ஏன்? அவர்கள் இயேசுவை எப்படியும் மடக்கி அடக்கி விடலாம் என்ற கற்பனையில் அவருக்கு விடுத்த சவால்கள் இயேசு விடமிருந்து அற்புதமான சொற்களை, செயல் களை வெளிக்கொணர் ந்தன. தீர்ப்பிடுவதற்கு ஒரு தகுதியும் கண்ணியம் இருக்க வேண்டும். பட்டமும் பணமும் பதவி யும் அல்ல. அந்த தகுதி உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும் என இயேசு கூறும் இப்பகுதி தீர்ப்பு அளிக்க வேண்டாம் என்பதைவிட தீர்ப்பளிப்பதற்கான தகுதியை முன்னிறுத்துகிறது. கடவுளின் முன்னிலையில் பிறருக்கு தீர்ப்பு அளிக்கும் தகுதி நமக்கு இருக்கிறதா என்று சிந்திப்பதுநலம். இயேசுவை எப்படியும் மடக்க வேண்டும். அடக்க வேண்டும். இதுவே அவர்களதுவாழ்க்கை பிரச்சினையாக போய் விட்டது. அவர்களது சதிக்கு பயன்படுத்திய பகடைக்காய் அந்தப் பெண். இன் னொரு மனிதரை சொந்த நலனுக்காக பயன்படுத் துவதை விட பெரிய பாவம் உலகில் இல்லை என்று கூறலாம்.

ஆழமாய் அலசிப் பார்த்தால் நாம் பாவங்கள் என்று நாம் பட்டியல் இடும் பல செயல்களில் இறுதியில் இந்த ஒரு உண்மைதான் பின்னணியில் இருக்கும். மற்றொரு மனிதப் பிறவியை நம் சுயநலத்திற்குப் பயன்படுத்துவது பலியிடுவதாக அமையும். குற்றங்களை தண்டிக்கும் கடவுளோடு வாழ்வது எளிது. ஆனால் எந்த நேரமும் எந்த நிலையிலும் அன்பு ஒன்றையே வாரி வாரி வழங்கும் ஒரு கடவுளோடு வாழ்வது பெரிய சவால் இந்த வாழ்வைத்தான் இயேசுவும் விரும்புகிறார்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2013-13.04.2013



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**ஆலய வழிபாடே அமைதிக்கு வித்திடும்!**

**எல்லோரிடமும் எளிதில் பழகும் கும்ப இராசி நேயர்களே!**

### குடும்பத்தில் சுபகாரியப்பேச்சுக்கள் கைகூடி வந்து மகிழ்ச்சியை வழங்கும் கல்விக்கான முயற்சி, கடல் தாண்டும் முயற்சிகளிலிருந்த தடைகள் நீங்கும்

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதனின் வக்ர இயக்கமும், சகாய ஸ்தானாதிபதி மற்றும் சுகாதிபதியின் பலமிழந்த சஞ்சாரமும் மன அமைதி குறைவை உருவாக்கும் விதத்தில் இருக்கிறது. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாவதில் தாமதம் ஏற்படும். வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய், சூரிய சேர்க்கை இருப்பதால் கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது. அடுத்தவர்களை நேசிப்பதன் மூலமும் அருகில் இருப்பவர்கைள அனுசரிப்பதன் மூலமும் அமைதி கிடைக்க் வழிபிறக்கும். குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் செலுத்துவதே நல்லது.

உங்கள் இராசியிலேயே அஷ்டமாதிபதி சஞ்சரிக்கின்றார். அதுமட்டுமல்ல, அர்த்தாஷ்டம குருவும் பலம்பெற்றிருக்கிறார். சகோதரகாரன் செவ்வாய் 6க்கு அதிபதி சந்திரனுடன் இணைந்து மாதத் தொடக்க நாள் அமைகிறது. எனவே, எதையும் ஒரு ஸ்திரமான முடிவெடுக்க முடியாத சூழ்நிலை உருவாகும். குடும்ப பிரச்சினைகளை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு இருந்தாலும் மற்றவர்களின் மனவருத்தத்திற்கு ஆளாகும் சூழ்நிலையும் ஏற்படலாம். நவக்கிரகங்களையும் நீங்கள் வழிபட்டு வருவது உங்கள் ஜாதக அடிப்படையில் உள்ள திசா புத்திக்கேற்ப தெய்வ வழிபாடுகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும். பொதுவாக அனுமன் வழிபாட்டை சனிக்கிழமை தோறும் செய்வது நல்லது. விஸ்வரூப ஆஞ்சநேயர் வீற்றிருக்கும் ஸ்தலங்களுக்குச் சென்று வெற்றிலை மாலை அணிவித்து வழிபாடு செய்து வந்தால் உற்றார், உறவினர்களின் அன்பிற்கு பாத்திரமாக இயலும் இந்த வழிபாடுகள் உன்னதமான வாழ்க்கைக்கும் அடித்தளம் அமைத்துக் கொடுக்கும்.

மீன் சுக்கிரனின் சஞ்சாரம்!

மார்ச் 18 ஆம் திகதி மீன இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இது ஓரளவு நன்மையை வழங்கும். 4,9 க்கு அதிபதி உச்சம் பெறும்பொழுது குடும்பத்தில் சுபகாரிய பேச்சுக்கள் கைகூடி வரும். உல்லாச பயணங்களை மேற்கொள்வீர்கள். கல்விக்காக எடுத்த முயற்சிகளிலும் கடல்தாண்டும் முயற்சிகளிலும் அனுகூல செய்தி வந்து சேரும். பங்காளி பகை மாறும். பூர்வீக சொத்துக்களில் வில்லங்கங்கள் விலகும்.

மீன புதனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 4 ஆம் திகதி புதன் நீச்சம் பெறப் போகிறார். எனவே, குடும்ப சுமை கூடும். களத்திர வழியில் மற்றும் புத்திர வழியில் ஏற்படும் பிரச்சினைகளை ஒரு வழியான சமாளிப்பீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி ஒரு தொகை ஒன்றை செலவிடும் சூழ்நிலை உருவாகும். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையிலேயே வைத்துக்கொள்வது நல்லது. சில சொத்துக்களை திடீரென விற்க நேரிடலாம். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு பொறுப்புகள் மாறும். உத்தியோகஸ்தர்களுக்கு நீண்ட தூரங்களுக்கு மாறுதலாகி செல்லும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகலாம்.


செவ்வாய் பெயர்ச்சியும் சுக்ர பெயர்ச்சியும்!

ஏப்ரல் 10 ஆம் திகதி மேஷ இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். மறுநாள் சுக்ரனும் மேஷ இராசிக்கு செல்கிறார். அவற்றின் மீது வக்ர சனியின் பார்வை பதியும் என்பதால் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டிய நேரமிது. கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை. ஆரோக்கிய குறைபாடுகளும் அடிக்கடி வந்து அலை மோதும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். சிறிய தொல்லைகள் தோன்றும் பொழுது மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது. இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வதோடு செவ்வாய்க்கிழமை தோறும் துர்க்கை வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

இம்மாதம் வரவும் செலவும் சமமாகும் மாதமாகவே அமையப்போகிறது. இராசி நாதன் வக்ர இயக்கத்தில் இருப்பதால் எதையும் யோசித்து செய்யுங்கள் உடன் பிறப்புகளையும் உடன் இருப்பவர்களையும் பகைத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது. வாக்கு ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால் கோபமும் படபடப்பும் அதிகரிக்கலாம். மாதத்தின் மையப்பகுதியில் உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைத்து ஒரு நல்ல காரியத்தை செய்து முடிப்பீர்கள். செவ்வாய், சனி பார்வை காலத்தில் சிறப்பு வழிபாடுகளை தேர்ந்தெடுத்து செய்வது தான் நல்லது. மொத்தத்தில் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டிய மாதமிது.

## சிவல்புரி சிங்காரம்

## மீனம்



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**திட்டமிட்ட காரியங்களில் திசை மாற்றம் ஏற்படும்!**

**குருவின் அருளுக்கு பாத்திரமாகி மற்றவர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்ளும் மீன இராசி நேயர்களே!**

### எந்த ஒரு காரியத்தையும் யோசித்தும் இறைவனைப் பூஜித்தும் செய்தல் நன்று விழிப்புணர்ச்சி காட்டி பங்குதாரர்களை பக்கபலமாக வைத்துக்கொள்ள வேண்டும்

தமிழ் மாதத்தின் நிறைவான மாதமாக இருக்கும் பங்குனி மாத கிரக நிலைகள் உங்களுக்கு மன நிறைவைத் தரும் விதத்தில் அமையவில்லை. எனவே, எந்த ஒரு காரியத்தையும் யோசித்து செய்வது நல்லது. அஷ்டமத்தில் சனி- ராகுவின் சஞ்சாரம், அதை செவ்வாய் தொடர்ந்து பார்க்கிறது. எனவே, உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி கிடைக்க ஒவ்வொரு நாளும் நீங்கள் கவனத்துடன் நடந்துகொள்வதே நல்லது. துணிவும் தன்னம்பிக்கையும் குறையும். சுறுசுறுப்பாக பணியாற்ற முடியாமல் சோம்பல் குடிகொள்ளும். பணிவோடு இருக்கும் நீங்கள் பல சமயங்களில் படபடப்பாகபேசி பல நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடலாம் 6 க்கு அதிபதி சூரியன் இராசியிலேயே இருப்பது அவ்வளவு நல்லதல்ல. எதிரிகளின் பலம் அதிகரிக்கும். இயல்பான வாழ்க்கையில் கடன் சுமை கூடும். உதிரி வருமானங்கள் குறையலாம்.

கிரகங்கள் சாதகமற்ற நிலையில் சஞ்சரிக்கும் பொழுது அருகில் இருப்பவர்களை அனு சரித்துச் செல்ல வேண்டும். ஆலய வழிபாட்டை முறையாக மேற்கொள்ள வேண்டும். ஆற்றல் மிக்கவர்களை அரவணைத்துக் கொண்டு செயற்படவேண்டும். கூட்டு முயற்சிகளில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டி பங்குதாரர்களை பக்க பலமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

என்ன இருந்தாலும் அஷ்டமத்து சனி காலத்தில் விரயங்களே மேலோங்கும். வரவைக் காட்டிலும் செலவு கூடலாம். வருமான பற்றாக் குறை ஏற்படும். உறவு பகையாகாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். இதுபோன்ற காலங்களில் முழுமையாக குரு வழிபாட்டையும், சனீஸ்வரர் வழிபாட்டையும் வைத்துக் கொள்வது நல்லது. கருநிற காக மேறி காசினி தன்னைக்காக்கும்... என்ற சனிக்கவசத்தைத் தினமும் பாராயணம் செய்யலாம். எள் தீபமேற்றி சனி பகவானை வழிபாடு செய்யலாம். அன்னதானம், வஸ்திர தானங்களை செய்து அனைவரது வாழ்த்துக்களையும் பெறலாம். பிணி தீர்க்கும் சனியை முறையாக நீங்கள் வழிபட்டால் மணியான வாழ்க்கை அமையும். மனக்கசப்பு தரும் சம்பவங்கள் விலகும்.

மீன சுக்ரனின் சஞ்சாரம்!

மார்ச் 18 ஆம் திகதி மீன இராசியல் சுக்ரன் உச்சம் பெறப்போகிறார். அஷ்டமாதிபதி உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வாங்கல்- கொடுக்கல் அவ்வளவாக திருப்திகரமாக இருக்காது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. உடன்பிறப்புகள் வழியில் அனுசரிப்பு தேவை. வழக்குகளை தவிர்ப்பது நல்லது. ஆடை, ஆபரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்க உகந்த நேரமிது. வாகன பராமரிப்பு செலவு கூடும்.

மீன புதனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 4 ஆம் திகதி மீன இராசியில் புதன் நீச்சம் பெறுவது நன்மைதான். 4,7 க்கு அதிபதி நீச்சம் பெறுவதால் பயணங்களால் பலன் கிடைக்கும். அஞ்சல் வழியே அனுகூல செய்தி வந்து சேரும். வாயில் தேடி வரும் வரன்களை முடித்துக்கொள்ள வாய்ப்புகள் வந்து அலை மோதும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.


மேஷ செவ்வாயும் சுக்ர சஞ்சாரமும்!

ஏப்ரல் 10 ஆம் திகதி மேஷ இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். மறுநாள் சுக்ரனும் மேஷ இராசிக்குள் செல்ல இருக்கிறார். இந்த நேரத்தில் சனியின் பார்வை செவ்வாய் மீது பதிகிறது. எனவே, திடீர் திருப்பங்கள் பலவும் ஏற்படலாம். வீடு மாற்றம், இடமாற்றம், வியாபார மாற்றம் உருவாகலாம். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட வகையில் வலி வந்து நீங்கும். சொத்துப் பதிவு நடைபெறும் போது வில்லங்கம் எதுவும் இருக்கிறதா? என்று பார்த்துக் கொள்வது நல்லது. என்ன இருந்தாலும் எட்டில் இராகும் இருப்பதால் ஏற்றமும் இறக்கமும் மாறிமாறி வந்து கொண்டேயிருக்கும். முறையாக சர்ப்ப சாந்தியினை முன்னேற்றம் தரும் ஸ்தலங்களில் செய் வது நல்லது. இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடும் சனீஸ்வரப்பெருமான் வழிபா டும் செய்வது நல்லது.

இம்மாதம் வழிபாட்டின் மூலமே வளர்ச்சி காணவேண்டிய மாதமாகும். வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்க்ள ஒரு சிலருக்கு உருவாகலாம். சேமிப்பில் சிறிது கரையும் வியாபார போட்டிகள் அதிகரிக்கும். மற்றவர்களை நம்பிக் கொடுத்த காரியம் மீண்டும் உங்களிடமே வந்து சேரும். மாற்று மருத்துவத்தை மேற்கொள்வதன் மூலமே உடல் நலம் சீராகும். குடும்ப சுமைகூடும். அண்டை அயலரின் ஆதரவுக்கு பாத்திரமாக நடந்து கொள்வது நல்லது. குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்வதன் மூலம் பிரச்சினைகள் உருவாகலாம். செவ்வாய், சனி பரிகாரமும் ராகு, கேதுகளுக்குரிய வழிபாடுகளை செய்து கொள்வதன் மூலம் ஓரளவு நல்லபலன்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களவாணிப்பூனை இருக்கிற வீட்டுல கருவாட்டுக்கு எத்தன நேரம் காவலுக்கு நிக்கிறது? கூப்பிட்டாரு

போச்சு முத்துமணி கதை.

சாராயக் கடையில உக்காந்திருந்தவனப் பாத்து ரோட்டுக்கு அந்தப் பக்கம் நின்னு மாமனாரு கத்துனாரு:

அடேய் முத்துமணி.... நீ எனக்கு மாப்பிளையுமில்ல; மனுசனுமில்ல.

இட்லிக்கு எப்பவும் நாலு சட்டினி வேணும் முத்துமணிக்கு. ஒரு மொளகாச் சட்னி- ஒரு தக்காளிச்சட்னி- ஒரு தேங்காச் சட்னி- ஒரு கொத்தமல்லிச் சட்னி. நாக்குக்கு இன்னைக்கு எது புடிக்குதுன்னு நமக்கென்ன தெரியும்? அதனால நாலும் இருக்கணும்ங்கறது முத்துமணி முடிவு. சட்னியில நாலுக்கு ரெண்டு பழுதாகாதுங்கறது இன்னொரு தீர்மானம்.

சாப்பாட்டுக்கும் நெறத்துக்கும் ஒரு சம்பந்தம் இருக்கு. வெள்ளை

கழிஞ்சு ஊறுகாயாகி, ஊறுகாயில காயும போயித் தொக்குல வந்து நிக்குது.

வக்கீலப் பாக்கப்போகணும்; ஏழு மணிக்கே இட்லி வேணும்னு அன்னைக்குக் கேட்டுட்டான் முத்துமணி.

அப்பத்தான் மாவு ஊத்துறா லச்சுமி.

பண்ட பாத்திரம் வேற பத்துல கெடக்கு.

அவசர அவசரமா இட்லி சுட்டு கைக்குச் சிக்குன ஒரு தட்டுல போட்டு நீங்களே போட்டுத் தின்னுட்டுப்போங்கன்னு ஊறுகா பாட்டில் எடுத்து ஒரு ஓரத்துல வச்சுட்டா லச்சுமி.

இட்லியில ஆவிபோகுது; அவனுக்கு மானம் போகுது.

ஊறுகா பாட்டில எடுத்து ஒரு பக்கமாச் சாச்சு உள்ள கரண்டிய விட்டு,

# மூன்றாம் உலகப்போர்

## 75 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

மருமகன.

மாப்ள... மூளியா நிக்கிறாக எம் மகளும் எம் பொண்டாட்டியும். கண்ணு காது மூக்குல ஒண்ணுமேயில்லாம எம்மகள நான் பாத்ததேயில்ல. எம் பொண்டாட்டியும் கழுவிக் கவுத்த பாத்திரம் மாதிரி கேவலமாக் கெடக்கா. அவ கழுத்தப் பாத்துட்டு உன் புருசனுக்கு ஒண்ணுமில்லையேன்னு கேட்டிருக்காக அனுமந்தம் பட்டிக் கலியாண வீட்டுல. நீங்க கேவு முடிச்சு நகையத் திருப்பறது கடல் வந்திக் கருவாடு திங்கிற கதையாப் போயிரும். ஒண்ணு சொல்றேன் கேளுங்க- கையில கொஞ்சம் காசு வந்திருக்கு இப்ப. கொடுக்கிறேன்; அடகுகெடக்கிற நகைய மீட்ட அவுகவுக கழுத்துல போட்டுருங்க. இந்தாங்க ரூபா. வட்டிக்கும் சேத்துக் கொடுத்துருக்கேன். வாங்கியாந்திருங்க மாப்ள.


ஒரு வாரமாச்சு; ரெண்டு வாரமாச்சு; இந்தா இந்தான்னு இழுக்குது; நனை வந்தபாடில்ல. சாடைமாடையாக கேட்டாலும் வெறிநாயி மாதிரி உர்ருன்னு உருமுறான் முத்துமணி. பொண்டாட்டிகாரி அழுத்திக்கேட்டா, மிச்சம்வைக்காமச் சோத்தத் தின்னுட்டு எச்சித் தட்டைத் தூக்கி அடிக்கிறான்.

பொறுத்துப் பொறுத்துப் பாத்தாரு மாமனாரு; விசுக்குன்னு ஒருநாள் பஸ் ஏறிட்டாரு தேனிக்கு. அடகுக் கடைக்குப் போயி இன்ன மாசம் இன்னார்

வெள்ளையா முழி முழின்னு முழிக்கிற இட்லிய எத்தன நேரம் பாத்துக் கிட்டிருக்கிறது? சிவப்புல ஒண்ணு, பச்சையில ஒண்ணு, மஞ்சள்ல ஒண்ணு, ஆரஞ்சுல ஒண்ணுன்னு இட்லியச் சுத்தி இருந்தா அது கண்ணு வழியா மூளைக்குப் போயி ஏ நாக்கே..... எந்திரின்னு உறங்கிக் கிடக்கிற நாக்கை உசுப்புமா இல்லையா?ஒரு

ஆளுங்கட்சி கூட்டத்துக்கு ஆள் சேக்கிற மாதிரி அடிப்புடிச்சுக் கிடந்த தொக்கை வம்பாடுபட்டு ஒண்ணு சேத்து அவன் எடுத்து வைக்க பேய் புடிச்ச பொம்பள மாதிரி தடார்னு தட்டைத் தட்டிவிட்டா மாமியாகாரி.

ஏண்டி லச்சுமி. ஒனக்குப் புத்தி கித்தி கெட்டுப்போச்சா? அது உங்கப்



ஓரமாப் பிச்சு இட்லிய நாலு சட்னியிலயும் தனித்தனியா நனைச்சு நாக்குல போட்டா எந்தச் சட்னி அன்னைக்குத் தேறுதோ அதுலேயே கதைய முடிச்சுரலாமில்லையா? நல்லது பொல்லதுக்கு நாலுபேரு வேணுங்கிற மாதிரியே

பன் சாமியார் மட்டும் திங்கிற தனித் தட்டுடி. யாரு தட்டுல யாரு திங்கிறது? சாமி திங்கிற தட்டுல வந்ததும் போனதும் வாய் வச்சா தெய்வக்குத்தமாயிராதா? வேற தட்டு இருந்தாப் போடு; இல்ல கையில வாங்கித் திங்கச்

# முட்டைக்குள்ள மூச்சுவிடற குஞ்சுக்குப் படியளக்கிற கடவுளு, எம் பிள்ளைக்கு அளக்கமாட்டாரா?

பேருல எடுய்யா ரசீதன்னு எடுத்துப் பாத்தா அடகு வைக்கக் கொடுத்த நகைய வித்துட்டுப் போயிருக்கான் வெங்கம்பய. நகையும் கிரயம் போயிருச்சு; அடகு மீக்கக் கொடுத்து விட்ட காசும் ஆத்துல போயிருச்சு. அண்ணனையும் கொன்டுபுட்டு மதினியையும் மேச்ச கதையாகிப்

இட்லிக்கும் நாலு துணை வேணுமப்பா. கல்யாணம் முடிச்ச நாள்ல இருந்து இந்த விடத்துல கட்சி மாறுனதில்ல முத்துமணி.

ஆனா அவன் பொழப்புல சட்னியும் மரியாதையும் கொஞ்சம் கொஞ்சமாக் குறையுது.

நாலு மூணாகி, மூணு ரெண்டாகி, ரெண்டு ஒண்ணாகி இப்ப ஒண்ணும்

சொல்லு.

சுத்திக் குமிச்சவ தட்டுல கிடந்த இட்லியத் தலைகீழாக் கொட்டிட்டுத் தட்டைச் சுத்தி தண்ணி தொளிச்சுக் கைபடாமக் கரண்டியில எடுத்துட்டுப் போனா கொல்லைப்பக்கம். அவமானத்துல எரிஞ்சு கரியாகிப்போனான் முத்துமணி.

அழகான ஊரு கோகிலாபுரம் காத்தாடு வயக்காடு- விசிறிவிடத்

தென்னந்தோப்பு- ஒங்க வம்புக்கு நான் வல்லன்னு உத்தமபாளையத்த விட்ட ஒருங்கி நிக்கிற ஊரு.

அங்க ஒரு தென்னந்தோப்பு இருக்கு லச்சுமி பேருல. பேரன் பேத்திக்கு ஆகட்டுமேன்னு அவங்கப்பன் அதமட்டும் கோயிலுக்கு எழுதி வைக்கல.

அறுநூறு மரம்; ஏறுனவெட்டு- பதினாலாயிரம் காய் விழுகும். எறங்குன வெட்டி- எட்டாயிரம் காய் விழுகும்.

அந்தத் தோப்புக்கு எப்பவும் முத்துமணிதான் மராமத்து- போக்குவரத்து.

அன்னைக்குக் காய் எறக்க ஆளக் கூப்பிட்டுப் போயிட்டான் தோப்புக்கு.

போனா- பழைய காவக்காரனக் காணோம். ஒரு எளந்தாரி நிக்கிறான். அவன் வேலியோரமாவே தடுத்துட்டான் முத்துமணிய.

அய்யா... தோப்பு குத்தகைக்கு விட்டாச்சு. இந்தக் காய் வெட்டி எங்க வெட்டு. இனிமே நீங்க எனநி குடிக்கணும்னாக்கூட எங் முதலாளியக் கேக்கணும். லச்சுமியம்மா புருசன் தான நீங்க? உங்க சம்சாரம் சொல்லலையா? போங்கய்யா ; போயிட்டு வாங்க.

கழுத்தத்தான் புடிச்சுத் தள்ளல காவக்காரன்.

ச்சே... சிவலிங்கம் செக்காப் போயிருச்சுன்னா அதுமேல நாயும் நரியும் ஒண்ணுக்கு அடிக்குது. இது ஒரு பொழப்பா?

மூக்கு சிவக்குது முத்துமணிக்கு.

மாமனாரு- மாமியாரு- பொண்டாட்டிக்கிட்ட அவமானப்பட்ட போதுகூட முத்துமணிக்கு வருத்தம் இருந்துச்சே தவிர வலி இல்ல.

என்னைக்குப் பிள்ளைகளும் சேந்து அவன் மேல ஒரு நொட்டச் சொல்லுச் சொல்லிருச்சுகளோ அன்னைக்குத்தான் எவன் கழுத்த அறுத்தாச்சும் பொழச்சே ஆகணுங்கிற முடிவுக்கு வந்தான் முத்துமணி.

இனி ஆனைமலயான்பட்டிதான் அடைக்கலம்னு வந்த அன்னைக்கே பிள்ளைக ரெண்டையும் ராயப்பன்பட்டிப் பள்ளிக்கூடத்துல சேத்துட்டான். ஆரம்பத்துல அப்பன்மேல பிரியமாத்தான் இருந்துச்சு பிள்ளைகளும் போகப்போகப் புத்தி மாறிப் போச்சு

தாய் தகப்பன் மேல பிள்ளைகளுக்குப் பிரியம் குறையுதுன்னா அது வெளிய இருந்து வர்ற விவகாரமில்ல. வேம்புக்குக் கசப்பும் கரும்புக்கு இனிப்பும் வெளியயிருந்தா வருது? நல்லதோ கெட்டதோ உள்ளயிருந்துதான் வரணும். அப்பன் மேல பிள்ளைகளுக்கு அவமரியாதை வருதுன்னா புருசனைப்பத்தி பொண்டாட்டி நல்ல சொல்லுச் சொல்லி வைக்கலேன்னு அர்த்தம். ஆத்தா மேல பிள்ளைகளுக்கு ஆசை குறையுதுன்னா பொண்டாட்டியப்பத்திப் புருசன் நல்லெண்ணத்தை ஊட்டி வளக்கலேன்னு அர்த்தம். அம்மாவும் பாட்டியும் அப்பனைப்பத்தி மாத்தி மாத்திச் சொல்ல, அப்பனை ஒரு கீழ்ப்பார்வை பார்த்துப் பழகுதுக பிள்ளைக. நல்ல தகப்பன் மேல பழிசொன்னாலே நம்பிரும் பிள்ளைகை. முத்துமணி பாவம் பெறவியிலேயே விஷம். லேசா வத்தி வைக்கவும் பசக்குன்னு பத்திக்கிருச்சுக பச்சைப் பிள்ளைக.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த ராஜபக்ஷவுக்கு தண்டனை வழங்குங்கள்

## தென்னிந்திய தொ. சம்மேளனம் தீர்மானம் நிறைவேற்றியது

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்வுக்கு கடும் தண்டனை வழங்க இந்தியா தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளத்தின் பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத்தின் பொதுக் குழு கூட்டம் சம்மேளன தலைவர் அமீர் தலைமையில் சென்னையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

இலங்கைக்கு எதிராக ஐ.நா.வில் இந்திய தீர்மானம் கொண்டுவர முயற்சி மேற்கொள்ள வேண்டும் .மேலும் ராஜபக்ஷவுக்கு கடும் தண்டனை வழங்க இந்தியா தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவின் உள் விவகாரங்களில் தலையிடும் பாகிஸ்தானை வன்மையாக கண்டிக்கின்றோம்.

தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தும் இலங்கை இராணுவத்தினர் மீது மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரத்தில் இன்னும் இலங்கை சிறையில் வாடிக்கொண்டிருக்கும் மீதமுள்ள தமிழ் மீனவர்கள் உடனடியாக விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் தங்கள் உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் நலனுக்காக தனி ஈழம் பெற்றுதர மாநில அரசு எடுக்கும் எல்லாவிதமான முயற்சிகளுக்கும் தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் இனிமேல் தாக்கப்படாமல் இருக்கவும் சிறையில் இருக்கும் மீதமுள்ள மீனவர்களை விடுதலை செய்யவும் மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

மாநில அரசு எடுக்கும் எல்லாவிதமான முயற்சிகளுக்கும் தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனம் தனது முழு ஆதரவை அளித்து தமிழக அரசுக்கு உறுதுணையாக இருக்கும். மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

23 சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள்கலந்துகொண்டமைகுறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையின் இறைமைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும்

### புதிய சீன ஜனாதிபதி ஜின்பிங்

இலங்கையின் இறைமையை பாதுகாக்க பூரணமான ஒத்துழைப்பு வழங்கப்படும் என சீனா தெரிவித்துள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சீன ஜனாதிபதி ஜின்பிங் தொலைபேசி மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டுள்ளார்.இரு நாடுகளுக்கும் இடையில் நீண்ட காலமாக நெருங்கிய உறவுகள் பேணப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ஜின்பிங்கிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான உறவு நீடித்து வருவதாகவும் சீனாவின் ஒத்துழைப்பை இலங்கை மக்கள் வெகுவாக பாராட்டி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனாவின் பௌதீக ஒருமைப்பாடு மற்றும் இறைமை போன்ற விவகாரங்களில் இலங்கை முழுமையான ஆதரவளிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்கத் தீர்மானத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்த வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி கோரியிருந்ததாக தெரியவருகின்றது. (அ)

## புத்தரை பச்சை குத்தியிருந்த நபர் திருப்பி அனுப்பப்பட்டார்

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணியொருவர் புத்த பகவானின் உருவங்களை கைகளில் பச்சை குத்தியிருந்தமையால் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இங்கிலாந்தைச் சேர்ந்த 43 வயதான பிரான்சிஸ் என்ற நபரே இவ்வாறு திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 1.12 மணியளவில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் UL-504 என்ற விமானத்தில் இலங்கை வந்துள்ளார்.

இவரது இரு கைகளிலும் புத்த பகவானுடைய உருவம் பச்சை குத்தப்பட்டிருந்ததையடுத்து அதிகாரிகள் அவரை அழைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது பச்சை குத்துவது தனது தனிநபர் உரிமை என அவர் அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

எனினும் இதை ஏற்றுக்கொள்ள மறுத்த அதிகாரிகள் இலங்கையில் இத்தகைய விடயங்களை அனுமதிக்க முடியாதெனக் கூறி அவர் வருகை தந்த விமானத்திலேயே லண்டனுக்கு திருப்பியனுப்பியுள்ளனர். (அ)

## தமிழ் மீனவர்களை காப்பாற்ற கூட்டமைப்பு முனையவேண்டும்

### கோத்தபாய வலியுறுத்தல்

இலங்கை விவகாரங்களை தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்துகின்றனர்.

தமிழக மீனவர்கள் போலிப்பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக் கடற்படையினர் தங்கள் மீது தாக்குதல் நடத்துவதாக தமிழகத்தின் சில மீனவர்கள் போலிப்பிரசாரங்களை செய்து வருகின்றனர்.

தமிழக மீனவர்கள் இலங்கையின் மீன் வளங்களைச் சுரண்டி வருவதாகவும் இதனால் இலங்கை மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை இலக்கு வைத்தே இவ்வாறு ஒரு தொகுதி தமிழக மீனவர்கள் இவ்வாறான போலிப்பிரசாரங்களை செய்து வருகின்றனர்.

தமிழகத்தைச் சேர்ந்த சில தரப்பினர் இலங்கைக்குக் களங்கம் ஏற்படுத்தும் முனைப்புக்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதுடன் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் தமிழக மீனவர்கள் இவ்வாறு போலிப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக படகுகள்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் ஆயுதங்களை கடத்தினர். இலங்கை விவகாரங்களை தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இலங்கை வாழ் தமிழ்பேசும் மீனவர்களை பாதுகாக்குமாறு இந்தியாவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## மின்சாரம் தடைப்படும்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் மின்அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 5 மணிவரையும் சங்கர த்தை, அராலி தெற்கு, வடக்கு, கிழக்கு, மத்தி, யாழ்ப்பாணக் கல்லூரிப் பிரதேசம், வட்டு பொலிஸ் நிலையப் பகுதி ஆகிய இடங்களிலும் மறுநாள் புதன்கிழமை குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி ஆகிய இடங்களிலும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை அச்சுவேலிப் பிரதேசத்தின் இடைக்காடு, தம்பாலைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கோட்டே மேயர் தடுக்கப்பட்டார்

ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவை கட்டடத்துக்கு முன்னால் கொழும்பு கோட்டே நகர மேயர் ஜனக ரணவக்க நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்தை சுவிஸ் அதிகாரிகள் தடுத்து ள்ளனர்.

இத்தாலியின் ஊடாக சுவிட்சர்லாந்து செல்ல முயற்சித்த போது தாம் தடுக்கப்பட்டதாக ஜனக ரணவக்க குறிப்பிட்டுள்ளார். மேயர் மாநாடு ஒன்றுக்காக ஜனக இத்தாலிக்கு சென்றிருந்தார்.

இந்த நிலையில் அங்கிருந்து இலங்கையை சேர்ந்த பலருடன் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டிக்கும் முகமாக போராட்டம் ஒன்றை நடத்துவதற்காக அவர் ஜெனீவா செல்ல முயற்சித்தார். எனினும் தம்மை சுவிஸ் அதிகாரிகள் எல்லையில் வைத்து தடுத்து விட்டதாக ஜனக குறிப்பிட்டுள்ளார். (அ)

## அமெரிக்காவின் இறுதி வரைபுக்காக காத்திருக்கின்றோம்-அமைச்சர் சமரசிங்க



ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான அமெரிக்காவின் தீர்மானத்தின் இறுதி நகல் வரைபுக்காக அரசாங்கம் காத்துக் கொண்டிருப்பதாக ஜெனீவா சென்றுள்ள இலங்கை தூதுக்குழுவின் தலைவரான அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதி நகல் வரைபு சமர்ப்பிக்கப்பட்டதும் ஏனைய நாடுகள் இத்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின்போது பின்பற்றப்படும் அவற்றின் நிலைப்பாடு பற்றி முடிவு செய்யும்.

அதுமட்டுமல்லாது இந்தத் தீர்மானமானது வெறுப்புணர்வுடான நிகழ்ச்சி நிரலின் பேரில் கொண்டு வரப்படுகிறதே தவிர இலங்கையின் மனித வுரிமைகள் மேம்பாடுகள் தொடர்பாக கொண்டு வரப்படவில்லை .

இறுதித் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டதும் இலங்கை மக்களுக்கு உகந்ததை நிறைவேற்ற அரசாங்கம் அதனது உச்சபட்ச முயற்சிகளை மேற்கொள்ளும்.

இலங்கை தொடர்பான உலகளாவிய காலக்கிரம மீளாய்வு அறிக்கை ஐ.நா. மனித வுரிமைகள் பேரவையில் கடந்த வெள்ளிக்கிழமை அங்கீகரிக்கப்பட்டமை தொடர்பிலும் அமைச்சர் திருப்தி வெளியிட்டுள்ளார்.

அறிக்கை அங்கீகரிக்கப்படும் போது சில நாடுகள் கரிசனைகளை எழுப்பிய போதிலும் அறிக்கை ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவையின் 47 உறுப்பு நாடுகளாலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார். (அ)



மாற்றுவலுவுள்ளோருக்கு பொதுக்கட்டடங்களில் உட்பிரவேசிக்கும் வசதிகளைச் செய்வதற்கான செயலமர்வு நேற்றுமுன்தினம் சமூக சேவை அமைச்சினால் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் அங்கவீனமுற்றோர் தேசிய செயலகத்தின் பணிப்பாளர் எம்.டி.சி [illegible] உள்ளிட்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

(படம்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிப்புலனாய்வு தொடர்பில் ஜப்பானுடன் ஒப்பந்தம்

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியும் ஜப்பான் நிதிப் புலனாய்வுப் பிரிவும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நிதி புலனாய்வு தகவல் பகிர்வு தொடர்பாக இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது. இதன்மூலம் நிதிமோசடிகள் மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளுக்கு வழங்கப்படும் நிதி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக பயங்கரவாத நிதி மோசடிகள் மற்றும் சட்டவிரோத நிதிக் கொடுக்கல்- வாங்கல்களை ஒழிக்க வழிகோலும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அரசாங்க பொது ஊழியர் சங்கம் உள்ளூர் ஆணையாளரை சந்தித்தது

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தினர் உள்ளூராட்சி ஆணையாளரை அவரது திணைக்களத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது அட்டவணைப்படுத்தப்படாத வெற்றிடங்கள் நிரப்புதல், பிரதேசசபை, நகரசபைகளில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களின் தரம் (grade) சம்பளம், உள்ளூராட்சி சேவை ஆணைக்குழு செயலாளர் சுற்று நிருபங்கள் என்பனமற்றி விரிவாக கலந்துரையாடினர். மேலும் தற்போதைய மாகாண உள்ளூராட்சி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவி நிலைகளின் கல்வித்தகைமை மற்றும் நியமனங்கள், நேர்முக பரீட்சைப் பெறுபேறு நடைமுறைப்படுத்தாதுள்ளமை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இவை தொடர்பில் நியாயமான தீர்வு தமக்கு கிடைக்காது விட்டால் தாம் ஆளுநரை சந்திக்கப்போவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதற்கு பின்னர் சாதகமான நிலை ஏற்படாது விட்டால் தாம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகவும் பிரதிநிதிகள் அங்கு வலியுறுத்தினர். (அ-60)

# செயற்கை உறுப்புக்கள் பொருத்தும் மருத்துவ முகாம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மேத்தா பவுண்டேசன் நிறுவனத்தினால் மாற்றுவலுவுள்ளோருக்கான செயற்கை கை, கால் பொருத்துதல் தொடர்பான மருத்துவ முகாமின் இரண்டாம் கட்ட நிகழ்வு எதிர்வரும் 23, 24,25 ஆம் திகதிகளில் கண்டி வீதியிலுள்ள கருணா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பாடசாலை மாணவர்களுக்கும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 4 மணிவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரையும் ஏனையவர்களுக்கும் இம்மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

இவ்வருடம் மாசி மாதம் நடைபெற்ற மருத்துவ முகாமில் செயற்கை கை, கால், ஆதார உறுப்புக்கள் போன்றவற்றிற்கு அளவு எடுக்கப்பட்டவர்களுக்கே அவற்றைப் பொருத்துவதற்காகவும் நடைப்பயிற்சி ஆகியவற்றிற்கே இம்முறை மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

இதில் உரிய பயனாளிகளைக் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மேத்தா நிறுவன தலைவர் டாக்டர் பி.பனாவ அறிவித்துள்ளார். அத்துடன் இது தொடர்பான அறிவித்தல் பிரதேச செயலர், அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கைதானவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யானைத் தந்தங்களுடன் யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் இந்த மாதம் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் வைத்து புலனாய்வு தரப்பினரால் அவர் கைது செய்யப்பட்டார். அவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (அ)

# கடலில் மூழ்கி மாணவன் பலி!

கடலில் நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த 13 வயது மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான். இச்சம்பவம் மட்டக்களப்பு பாசிக்குடாவிலுள்ள தோணாவில் பகுதியில் உள்ள கடலில் நேற்று முன்தினம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது,

கண்டி மாவனல்லை பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல்யம் மிக்க பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவர்கள் கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை பாசிக்குடா கடற்கரையை பார்வையிட வந்திருந்தனர்.

இதன்போது பொலிஸாரினால் சுற்றுலா பயணிகளுக்கென குளிப்பதற்கு தடைவிதிக்கப்பட்ட பிரதேசத்தில் (தோணவில்) குளித்துக் கொண்டிருக்கும் போது இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.கசுன் வயது 13 என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார். கல்குடா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)




★1241-போலந்தின் கிராக்கோவ் நகரம் மங்கோலியர்களினால் சேதமாக்கப்பட்டது.

★1438-ஹாப்ஸ்பேர்க்கின் இரண்டாம் ஆல்பேர்ட் ஜெர்மனியின் மன்னனாக முடிசூடினான்.

★1850-அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

★1874-வணிக உரிமைகளை வழங்கும் உடன்பாட்டில் ஹவாய் ஐக்கிய அமெரிக்காவுடன் கையெழுத்திட்டது.

★1909-ஐனார் டேசாவு குறுகிய அலை வானொலி அலைப்பரப்பியை உபயோகித்து முதலாவது ஒலிபரப்பாளரானார்.

★1913-கிரேக்கத்தின் முதலாவது ஜோர்ஜ் மன்னன் படுகொலை செய்யப்பட்டான்.

★1915-முதலாம் உலகப் போர்: கலிப்பொலி சமரில் பெரும் கடற்படைத் தாக்குதல் இடம்பெற்றது. பிரித்தானிய மற்றும் பிரெஞ்சுக் கப்பல்கள் மூன்று மூழ்கடிக்கப்பட்டன.

★1922-ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட மகாத்மா காந்தி ஆறு ஆண்டு சிறைத்தண்டனை பெற்றார். இரண்டு ஆண்டுகளில் விடுதலை ஆனார்.

★1925-இலினோய் மற்றும் இண்டியானா மாநிலங்களில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக 695 பேர் உயிரிழந்தனர்.

★1937- டெக்சாஸ் மாநிலத்தில் நியூ லண்டன் நகரில் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட இயற்கை வாயு வெடிப்பில் 295 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பலியாகினர்.

★1940-இரண்டாம் உலகப் போர்: பிரான்சையும் ஐக்கிய இராச்சியத்தையும் எதிர்த்துப் போரிட ஹிட்லரும் முசோலினியும் கூட்டிணைந்தனர்.

★1944-இத்தாலியில் வேசூவியஸ் மலை நெருப்பு கக்கியதில் 26 பேர் பலியானதோடு ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறினர்.

★1945-இரண்டாம் உலகப் போர்: ஆயிரத்து 250 அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் பேர்லின் நகரைத் தாக்கின.

★1945-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானில் ஜப்பானுக்கும் நேச நாடுகளுக்கும் இடையில் ஒகினவா சமர் ஆரம்பமாகியது.

★1953-மேற்கு துருக்கியில் இடம்பெற்ற நிலநடுக்கம் காரணமாக 250 பேர் உயிரிழந்தனர்.

★1962-அல்ஜீரிய விடுதலைப் போர் முடிபுக்கு வந்தது.

★1965-சோவியத் விண்வெளி வீரர் அலெக்சி லியோனொவ் வஸ்கோத் 2 விண்கலத்தின் வெளியே 12 நிமிடங்கள் நடமாடி விண்வெளியில் நடந்த முதல் மனிதன் ஆனார்.

★1970-கம்போடியாவின் மன்னர் நொரொடோம் சிஹானுக் பதவியில் இருந்து அகற்றப்பட்டு லொன் நொல் கம்போடியாவின் பிரதமரானார்.

★1971-பெருவில் நிலச்சரிவு காரணமாக 200 பேர் உயிரிழந்தனர்.

★1980-ரஷ்யாவில் வஸ்தோக் -2 எம் ஏவுகணை ஏவும் கணத்தில் வெடித்ததால் 50 பேர் உயிரிழந்தனர்.

★1989-எகிப்தில் 4 ஆயிரத்து 400 ஆண்டுகள் பழைமையான பதனிடப்பட்ட உடல் பிரமிட் ஒன்றினுள் கண்டுபிடிக்கப்பட்டது.

★1990-கிழக்கு ஜேர்மனியில் 1932 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற் தடவையாக தேர்தல் இடம்பெற்றது.

★2003- ஐக்கிய அமெரிக்கா ஈராக்குடன் போரை ஆரம்பித்தது. ஈராக்கின் மத்திய வங்கியில் இருந்து ஒரு பில்லியன் பெறுமதியான பணம் சதாம் உசையினாலும் அவரது குடும்பத்தினராலும் எடுத்துச் செல்லப்பட்டது.

### பிறப்புக்கள்

★1828- வில்லியம் கிரேமர், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ.1908)

★1837-குரோவர் கிளீவ்லாண்ட், ஐக்கிய அமெரிக்காவின் 22 ஆவது, 24 ஆவது குடியரசுத் தலைவர் (இ.1908)

★1858-ருடோல்ஃப் டீசல், ஜேர்மனியக் கண்டுபிடிப்பாளர் (இ.1913)

★1919-இந்திரஜித் குப்தா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவர் (இ.2001)

★1936-பிரட்ரிக் கிளார்க், தென்னாபிரிக்கா ஜனாதிபதி, நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புக்கள்

★1889-வில்லியம் நெவின்ஸ், யாழ். மத்திய கல்லூரி தலைமை ஆசிரியர், ஆங்கிலம் -தமிழ் அகராதி தொகுத்து வெளியிட்டவர்.

★1996- ஒடீசியஸ் எலீட்டிஸ், நோபல் பரிசு பெற்ற கிரேக்க எழுத்தாளர் (பி.1911)

★2007-பாப் வுல்மர், துடுப்பாட்டக்காரரும் துடுப்பாட்ட பயிற்சியாளரும்(பி.1948)

### சிறப்பு நாள்

★துருக்கி- கலிப்பொலி நினைவு தினம்

### மோகனதாஸ் கரம்சந்த் காந்தி



மோகனதாஸ் காந்தி 2 ஒக்டோபர் 1869 அன்று இந்திய நாட்டின் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் எனும் ஊரில் பிறந்தார். இவரது தாய்மொழி குஜராத்தி. தந்தையார் பெயர் கரம்சந்த் காந்தி, தாயார் புத்லிபாய். தனது 16 ஆவது வயதில் காந்தி தன் தந்தையை இழந்தார். தனது 18 ஆம் வயதில் பள்ளிப்படிப்பு முடிந்த பின்னர் பாரிஸ்டர் எனப்படும் வழக்குரைஞர் படிப்பிற்காக காந்தி இங்கிலாந்து சென்றார். தன் படிப்பை வெற்றிகரமாக முடித்து தாயகம் திருப்பிய காந்தி மும்பையில் சிறிது காலம் வழக்குரைஞராக பணியாற்றினார்.

இச்சமயத்தில் தென்னாபிரிக்காவில் தன் தகுதிக்கேற்ற வேலை ஒன்றுக்கு வெற்றிடம் இருப்பதாக அறிந்த காந்தி 1893 ஏப்ரல் மாதம் தென்னாபிரிக்கா பயணமானார். இச்சமயம் தென்னாபிரிக்காவில் ஆங்கிலேயர் ஆட்சியில் நிறவெறியும் இனப்பாகுபாடும் மிகுந்து இருந்தது. இதன்மூலம் தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களும் அங்கே குடியேறிய இந்தியர்களும் படும் இன்னல்களை காந்தி நன்குணர்ந்தார். அதன்போது அங்குள்ள இந்தியரின் வாக்குரிமையைப் பறிக்கும் தீர்மானத்தை நாட்டல் சட்டப்பேரவை இயற்ற இருப்பதாக செய்தித்தாளில் படித்தறிந்தார். அங்குள்ள இந்திய நண்பர்களை ஒன்று திரட்டி இத்தீர்மானத்தை எதிர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதன்மூலம் அங்குள்ள இந்தியர்களிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். பின்னர் இந்திய காங்கிரஸ் என்ற பெயரில் கட்சி தொடங்கி அதற்கு அவரே பொறுப்பாளரானார். இதன்மூலம் அங்குள்ள இந்தியர் அனைவரையும் உரிமைக்காக குரலெழுப்ப ஊக்கப்படுத்தினர்.

1906 ஆம் ஆண்டு ஜோகார்னஸ்பேக் நகரில் நடந்த ஒரு போராட்டத்தில் முதன் முறையாக சத்தியாகிரகம் எனப்படும் அறவழிப்போராட்டத்தை பயன்படுத்தினார். இவ்வாறு தனது அறவழிப் போராட்டத்தின் மூலம் அங்கு வாழும் இந்தியரின் சமூக நிலையை மேம்படுத்தும் முயற்சியில் வெற்றி கண்ட காந்தி தாயகம் திரும்பினார். இந்தியா வந்த அவர் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து ஆங்கிலேயர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் முழுவீச்சில் ஈடுபட்டார். அறப்போராட்ட வழிமுறைகளையும் சுதேசி போன்ற கொள்கைகளையும் வலியுறுத்தி காங்கிரஸ் இயக்கத்தை இந்தியாவின் மாபெரும் விடுதலை இயக்கமாக்கினார். போராட்டங்களால் பலமுறை சிறைசென்று மீண்டிருந்த காந்தி 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி நாதுராம் கோட்ஸே என்பவனால் புதுடில்லியில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்நாள் இந்தியாவின் தியாகிகள் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்கள் என்ற பதத்தை பயன்படுத்த பின்னடிக்கும் இந்தியா!

# அமெரிக்கத் தீர்மானம் தமிழருக்குத் திருப்தியளிக்குமா?



இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மானம் தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுகின்ற அளவுக்கு காத்திரமானதாக இருக்குமா என்ற கேள்வி இப்போது வலுப்பெறத் தொடங்கியுள்ளது. ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது அமர்வின் பக்க நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் இந்தத் தீர்மான வரைபு தமக்கு திருப்தியளிப்பதாக இல்லை என்று கூறியிருந்தார். அதுமட்டுமன்றி, தமிழ்நாட்டில் வைகோ போன்ற அரசியல் தலைவர்களும் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மானம் குறித்து அவநம்பிக்கை வெளியிடத் தொடங்கியுள்ளது.

எவ்வாறாயினும், தமிழர் தரப்புக்குத் திருப்தியளிக்கத்தக்க தீர்மானம் ஒன்று ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்படுவதற்கான காலச்சூழல் இன்னமும் உருவாகவில்லை என்பதே உண்மை. இந்த நிலையில் ஜெனீவா குறித்த மிகையான எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும்தான் இந்த ஏமாற்றக் கருத்துக்களின் பின்னணியாகும். ஜெனீவாவையும் அமெரிக்காவையும் மிகையாக நம்ப வைக்கும வகையில் செயற்பட்டது தமிழர் தரப்பின் தவறே. தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பு போர்க்குற்றங்கள் குறித்து ஒரு சர்வதேச விசாரணையை நடத்துவதுதான். ஆனால், சர்வதேச விசாரணைகளுக்கான அழுத்தங்களைக் கொடுக்கும் எந்த முயற்சியுமே ஏமாற்றத்தை அளித்துள்ளது. உண்மையில் ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வரப்போகும் தீர்மானம் என்பது ஒரு நடைமுறைத் தீர்மானமே தவிர, தலையீடு செய்வதற்கான தீர்மானம் அல்ல.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள், மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் மைக்கல் போஸ்னர் கடந்தவாரம் வெளியிட்டபோது ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார்.

ஐ.நா.வும் பிற அமைப்புகளும் இலங்கை விவகாரத்தில் சர்வதேச விசாரணைகளை நடத்த வேண்டும் என்று கோரிய போதிலும் அமெரிக்கா அதனை ஏற்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

அதுதான் அமெரிக்காவின் இன்று வரையுள்ள நிலைப்பாடு.

இலங்கை தொடர்பான கொள்கைகளை அமெரிக்கா மாற்றிக் கொண்டுள்ளதாக மைக்கல் போஸ்னர் குறிப்பிட்டிருந்தாலும் உள்ளக விசாரணை என்ற கட்டத்தை அமெரிக்கா இன்னமும் தாண்டிச் சொல்லவில்லை. அதாவது, தமிழர் தரப்பு விரும்பினாலும்சரி, வெளியுலகில் உள்ள மனித உரிமை அமைப்புகள் விரும்பினாலும்சரி, அமெரிக்கா அதனை இன்னமும் விரும்பவில்லை.

அமெரிக்கா மட்டுமல்ல இந்தியாவும்கூட அதை ஏற்கத் தயாரில்லை.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் போர்க்குற்றங்கள் நடந்திருப்பதை ஏற்கிறது. நம்பகமான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்கிறது. ஆனால், அதை உள்ளக விசாரணைகளே செய்ய வேண்டும் என்றுதான் எதிர்பார்க்கிறது. இந்தியாவோ போர்க்குற்றங்ள் என்ற வார்த்தையையே பயன்படுத்த பின்நிற்கிறது. மீறல்கள் இடம்பெற்றிருக்கலாம் என்கிறது; அதை அவர்களே விசாரித்துக் கொள்ள வேண்டும் என்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு நாடுகளினதும் முடிவுகள் மிக முக்கியமானவை. இந்த இரண்டு நாடுகளும் சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தாத நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் அதை நோக்கிச் செல்ல முடியவே முடியாது. இப்போது அமெரிக்கா கொண்டு வரப்போகும் தீர்மானம் கடந்த முறையை விட சற்று இறுக்கமாகத்தாக இருந்தாலும் அது தமிழர் தரப்பு எதிர்பார்க்கின்ற அளவுக்கு சர்வதேச விசாரணையைக் கோருகின்ற ஒன்றாக நிச்சயம் இருக்கப் போவதில்லை.

அமெரிக்கா இந்தப் போர்க்குற்றங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தவே இன்றுவரை எத்தனிக்கிறது- இதனையே தமது பிரதான உத்தியாக கருதவில்லை. இறுதியான- நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கு இலங்கையை இணங்கச் செய்வதற்கே போர்க்குற்ற விசாரணையை அமெரிக்கா கையில் எடுத்து வைத்துக்கொள்கிறது. அதற்கு அப்பால் செல்லும் திட்டம் இப்போதைக்கு அமெரிக்காவிடம் இல்லை.

இத்தகைய நிலையில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தால் போதும் எல்லாம் நடந்து விடும் என்ற கருத்து தமிழ்நாட்டில் இலங்கையில் தமிழர் தரப்பிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த தவறான கருத்தே தமிழர் தரப்பின் ஏமாற்றங்களுக்கு அடிப்படை. அமெரிக்கா எதைச் செய்யப்போகிறது என்பதைவிட, எதுவரை செய்யப் போகிறது என்பதுதான் முக்கியம். ஜெனீவாவில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதுடன் நின்று விடுவதால் எந்தப் பயனும் இல்லை. அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதற்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும். அல்லது அதனை ஒத்துழைக்க வைக்க வேண்டும். அவ்வாறு இல்லாத எந்தத் தீர்மானத்தினாலும் பயனில்லை.

இப்போது அமெரிக்காவும் இந்தியாவும் செய்ய முனைவது இதைத்தான். மிகவும இலகுவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதை நடைமுறைப்படுத்த இலங்கையை இணங்க வைக்க முனைகின்றன. ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்த நாடுகள் தோல்வி கண்டுவிட்டது உண்மை. அதை அந்த நாடுகளின் இராஜதந்திரிகள் தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனினும் மீண்டும்.

அதேபோன்ற தீர்மானத்தைத்தான் அந்த நாடுகள் கொண்டுவர நினைக்கின்றன. இதற்கு இலங்கை இணங்குமா இல்லையா என்பதுதான் முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

எனினும் இலங்கையை இணங்க வைப்பதற்கு உச்சக்கட்ட இராஜதந்திர முயற்சிகள் நடப்பது மட்டும் உண்மை. இதற்கு இலங்கை இணங்கினாலும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தியாக வேண்டும். அதற்கு நிச்சயம் ஒரு வருடகால அவகாசம் கொடுக்கப்படும். அதுவரை நிம்மதியாக இருக்கலாம் என்று இலங்கை அரசாங்கம் கருதிக் கொள்ளலாம். ஆனால், இந்த சடுகுடு விளையாட்டு நீண்டு செல்லப் போவதில்லை. அவ்வாறு நீடித்துச் செல்வதையும் உலகம் விரும்பாது.

இலங்கை அரசாங்கம் உலகம் நம்பக்கூடிய ஒரு நடுநிலையான விசாரணையை நடத்த இணங்குமா- அவ்வாறு நடத்த முடியுமா என்பது சந்தேகம்தான். ஏனென்றால் ஏற்கனவே இராணுவ விசாரணை நீதிமன்றம் ஒன்றை அமைத்து பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை என்ற அறிக்கையை இலங்கை கையளித்துள்ளது. அதற்கு மேல் இன்னொரு விசாரணையை நடத்தினால் இராணுவ விசாரணை பொய் என்றாகிவிடும். ஆனால், சர்வதேச நிர்ப்பந்ததோ இன்னொரு சுதந்திர விசாரணையையே வலியுத்தும்.

இப்படிப் பல சங்கடங்கள், சிக்கல்கள் உள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் எத்தகைய சுதந்திரமான உள்ளக விசாரணைக்கும் இணங்கப்போவதில்லை.

இலங்கை அரசு சுதந்திரமான விசாரணைகளைத் தானே நடத்தப் போவதில்லை என்று அமெரிக்காவும் இந்தியாவும் முடிவெடுக்கும் ஒரு கட்டம்வரும் வரைக்கும். போர்க்குற்ற விவகாரத்தில் சர்வதேச விசாரணை என்பது சாத்தியப்பாடானது அல்ல. அந்தநிலை வராது என்று உறுதியாக கூறமுடியாது. இப்போதைக்கு அதற்கான புறச்சூழல் இல்லை. அமெரிக்கா இப்படியான முடிவுக்கு வந்தாலும்கூட இந்தியாவை அதற்கு இணங்க வைப்பது அதுவும் காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கத்தை இணங்க வைப்பது என்பது குதிரைக் கொம்பாகவே இருக்கும். ஏனென்றால், இந்த விவகாரமும் அவர்களுடனும் தொடர்புபட்டது. இந்தியாவின் பெருக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

இந்தக் கள யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளாதவர்கள்தான், தமிழர் தரப்புக்கு ஜெனீவா கூட்டத் தொடர் நியாயம் பெற்றுக்கொடுக்கும என்று நம்பியுள்ளனர். இப்போது ஜெனீவாவில் நடக்கின்ற கூட்டமும் சரி கொண்டு வரப்படும் தீர்மானமும் சரி தமிழர் தரப்புக்கு நன்மையளிக்கக் கூடிய ஒன்றாக- அவர்களுக்கு நீதியைப்பெற்றுக்கொடுக்கும் ஒன்றாக இருக்காது. வேண்டுமானால் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையைச் சீண்டிப் பார்ப்பதை வேடிக்கை பார்த்து ரசிக்கலாம். ஆறுதல் கொள்ளலாம்.

நன்றி: இணையம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

401

## பெருந்தன்மை வாய்ந்த பணக்காரர்



விவசாயி முருகனும் வியாபாரி கோபியும் பக்கத்துப் பக்கத்து வீடுகளில் வசித்து வந்தனர். கோபி பணக்கார வியாபாரி. மிகவும் நல்ல குணமுடையவர். ஆனால் முருகனுக்கு ஏனோ அவரைக் கண்டால் பிடிக்கவில்லை. ஒருமுறை முருகனுடைய பெட்டைக்கோழி மீது கோபியின் குதிரை வண்டியேறி கோழி நசுங்கி இறந்தது. உடனே முருகன் கோபியிடம் சண்டைக்குப் போனான்.


இரு உன் நட்டத்தை ஈடு கட்டுகிறேன். உன் கோழிக்கு என்ன விலை எதிர்பார்க்கிறாய்? என்றான் கோபி.

நீ தரும் பிச்சைக்காசு எனக்கு வேண்டாம்! எனக்கு என் கோழிதான் வேண்டும் என்று முருகன் அடம்பிடிக்க கோபி வேறு ஒரு கோழி வாங்கிக்கொடுத்தான். ஊரில் எல்லோருக்கும் சிண்டு முடிந்து கலகம் ஏற்படுத்தி விட்டு அதில் சுகம் காணும் கணக்குப்பிள்ளை முருகனிடம் வந்து அந்தக் கோபியை விடக் கூடாது மச்சான்! உன் கோழியை அநியாயமாகக் கொன்றவனை வயிற்றில் அடித்துக்கொண்டு அழ வைக் கிறேன். அதற்கு சிறிது பணம் தேவைப்படும் என்று சொல்லி முருகனைத் தூண்டி விட்டு அவனிடம் ஒரு பெரிய தொகையை வாங்கிக் கொண்டு கோபியின் தோட்டத்தை அவன் ஊரில் இல்லாத போது இரவோடு இரவாக அயலூர் ஆட்களை வைத்து நாசம் செய்தான். முருகனுக்கு அபார திருப்தி உண்டாயிற்று.

ஊரிலிருந்து திரும்பிய கோபி தன் தோட்டத்தின் நிலைமையைக் கண்டு வருந்தினான். கோபியை சந்தித்த கணக்குப்பிள்ளை கவலைப்படாதீர்கள்! தோட்டத்தை நான் ஆட்கள் வைத்து சரி செய்து விடுகிறேன். ஆனால் அதற்கு செலவாகும் என்றான்.

பின்பு கோபியிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு ஆட்களை வைத்து தோட்டத்தைச் சரி செய்தான். ஆனால் கணக்குப்பிள்ளை எங்கே தன்னைப் பற்றி சொல்லிவிடுவானோ என்று முருகனுக்கு வயிற்றைக் கலக்கியது. உடனே கணக்குப்பிள்ளையை அழைத்து அவன் கையில் பணத்தை பைகளை ஒவ்வொரு முறையும் நிரப்பினான்.

ஒருநாள் கோபி முருகனைத் தன் வீட்டுக்கு அழைத்து முருகா உன் கோழி செத்துப் போனதற்காக என் மீது நீ விரோதம் பாராட்டினாய். உன்னைக் கணக்குப்பிள்ளை மிகவும் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டான். நீ இனியும் அதுபோல் செய்யாதே! உன் மீது எனக்கு எந்தக்கோபமும்



இல்லை. நாம் இனி நல்ல நண்பர்களாக இருப்போம் என்றான்.

கோபியின் பெருந்தன்மையைக் கண்டு வாயடைத்துப்போன முருகன் இந்த நல்ல மனிதனிடமா பகைமை பாராட்டினோம் என்று வெட்கத்தில் தலை குனிந்தான்.

அமுக்க கணக்குப்பிள்ளை ஓகோ! பணம் சம்பாதிக்க இப்படியொரு வழியா? என்று சொல்லி விட்டு அடிக்கடி கோபி வீட்டுக்குச் செல்ல ஆரம்பித்தான். ஒவ்வொரு முறையும் அதைப் பற்றி முன்னமே முருகனிடம் அறிவித்து மிரட்ட முருகன் அவன்

## வியாபார இரகசியம்

### அம்புலிமாமா கதைகள்

சிதம்பரமும் அண்ணாமலையும் ஒரு நகரத்தின் பெரிய வியாபாரிகளாக இருந்தனர். இருவருக்கும் இடையே வியாபாரத்தில் கடும் போட்டி நிலவியது. ஒருநாள் ஒரு இளைஞன் அண்ணாமலையை தேடி வந்தான்.

என்ன விடயம் என்று அண்ணாமலை கேட்டார்.

ஐயா என் பெயர் பாலாஜி. நான் சிதம்பரத்திடம் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் கொடுத்த சம்பளம் மிகக் குறைவாக இருந்ததால் வேலையிலிருந்து நின்று விட்டேன். உங்களிடம் வேலை பார்க்க விரும்புகிறேன் என்றான்.

சிதம்பரத்தின் வியாபார இரகசியங்களை எனக்குச் சொல்வாயா? என்று கேட்டார் அண்ணாமலை.



மன்னித்து விடுங்கள் ஐயா, அவற்றை உங்களிடம் சொல்ல என்னால் இயலாது. ஏனெனில் அவற்றைத் தங்களிடம் சொன்னால் பின்பு என்னை உங்களிடம் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளமாட்டீர்கள் என்றான் பாலாஜி.

ஏன் அப்படிச் சந்தேகப்படுகிறாய்? என்று அண்ணாமலை கேட்க எனது வியாபார இரகசியங்களை அவருக்கு சொல்லமாட்டாய் என்பது என்ன நிச்சயம் என்று நீங்கள் அடுத்ததாகக் கேள்வி கேட்பீர்கள். அதனால்தான் என்றான் பாலாஜி. பாலாஜி! எங்களுக்குள் வியாபாரத்தில் போட்டியுள்ளது உண்மையே. ஆனால் அதற்காக நேர்மையற்ற வழிகளில் உன்னை ஈடுபடுத்தமாட்டேன். நீ இன்றே வேலையில் சேரலாம் என்று இன்முகத்துடன் பாலாஜியை வரவேற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டை கனேடிய அரசு பகிஷ்கரிக்காது

## கனேடிய பிரதமர் பங்கேற்கார் என்கிறார் விசேட பிரதிநிதி

(கொழும்பு)

**இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள பொது நலவாய தலைவர்களின் அமர்வை கனடா பகிஷ்கரிக்காது என்று கனடாவின் பொதுநலவாய நாடுகளுக்கான விசேட பிரதிநிதி ஹுக் சேகல் (Hugh Segal) தெரிவித்துள்ளார்.**

சேகல் இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த நிலையில் லண்டனில் வைத்து அவரை இலங்கையின் ஆங்கில பத்திரிகையின் செய்தியாளர் நேர்காணல் நடத்தியுள்ளார். அந்நேர்காணலில் அவர் கூறியவை வருமாறு,

இலங்கைக்கு உண்மையைக் கண்டறியும் நோக்குடன் பயணம் மேற்கொள்கிறேன். இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய அமர்வை கனடா பகிஷ்கரிக்காது. எனினும் அதில் கனடாவின் பிரதமர் ஹாப்பர் பங்கேற்கமாட்டார்.

2011 ஆம் ஆண்டு பேர்த்தில் நடைபெற்ற பொதுநலவாய அமர்வின் போது இலங்கையில் 2009 ஆம் ஆண்டு போரின் போது இரண்டு தரப்பாலும் போர்க்குற்றம் நிகழ்ந்ததாக சர்வதேச நிபுணர்களின் அறிக்கை சுட்டிக்காட்டியிருந்தது.

இதன் அடிப்படையிலேயே ஹாப்பர் இலங்கைக்கு செல்லப் போவதில்லை என்று தீர்மானித்துள்ளார்.

இலங்கைக்கு தாம் திறந்த மனத்துடன் சிங்கள. தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் நண்பனாகிறேன். இதன்படி இலங்கையின் உண்மை நிலவர அறிக்கையை கனேடிய அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கவுள்ளேன்.

ஏப்ரலில் லண்டனில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் நடவடிக்கைக் குழு கலந்துரையாடல் அட்டவணையில் இலங்கையின் முன்னாள் நீதியரசரின் பதவி நீக்க விடயமும் அடக்கப்பட்டுள்ளது.

எனினும் அதில் இலங்கையில் பொதுநலவாய தலைவர்களின் அமர்வு நடத்தப்படுமா? நடத்தப்படாதா? என்ற தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பது தொடர்பில் தம்மால் கருத்துக் கூற முடியாது என்று சேகல் குறிப்பிட்டுள்ளார்.

கனேடிய அரசாங்கம் அங்குள்ள தமிழர்களின் வாக்குகளை நோக்காகக் கொண்டு செயற்படுகிறது என்று கூறப்படும் குற்றச்சாட்டை சேகல் மறுத்துள்ளார். தமது பயணத்தை இலங்கையின் கனேடிய உயர்ஸ்தானி கரகமே ஒழுங்கு செய்ததாக அவர் தெரிவித்துள்ளார். (அ)

# 53 தமிழக மீனவர்களில் 34 பேர் விடுவிக்கப்படுவர்

*இலங்கை அறிவிப்பு*

சிறைபிடித்து தடுத்து வைக்கப்பட்டுள்ள 53 தமிழக மீனவர்களில் 34 பேரை மட்டுமே விடுவிப்பதாக இலங்கை அறிவித்துள்ளது.

அடுத்தடுத்து 2 நாட்களில் மொத்தமாக 53 மீனவர்களை அடித்தும் மிரட்டியும் இலங்கைக் கடற்படையினர் கடத்திச் சென்ற செயல் ஒட்டுமொத்த தமிழக மக்களையும் கொதிப்படையச் செய்துள்ளது.

இதையடுத்து இலங்கைத் தூதரை அழைத்து மத்திய அரசு கண்டித்துக் கொண்டதாக ஒரு செய்தி வெளியானது.

இந்த நிலையில் கைது செய்யப்பட்டவர்களில் 34 பேரை மட்டும் விடுவித்துள்ளதாக இலங்கை தெரிவித்துள்ளது.

முதலில் கடந்த புதன்கிழமையன்று 19 மீனவர்களை கைது செய்தது இலங்கைக் கடற்படை. அதைத் தொடர்ந்து 34 பேரை கைதாகினர். இதனால் தமிழகத்தில் கடும் கொதிப்பு நிலை ஏற்பட்டது. இந்தச் செயலைக் கண்டித்து முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்குக் கடிதம் எழுதினார்.

அதில் உங்களது தொடர் மௌனம் இலங்கைக்கு ஊக்கம் தருவதாக உள்ளதாக பிரதமரை அவர் கண்டித்திருந்தார். இந்த நிலையில் 34 பேரை மட்டும் விடுவிப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. அத்துடன் அவர்களுடன் 11 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ-2)

# நிறுத்தல் அளவை கருவிகள் பரிசோதிக்கப்பட்டன

## *15 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு*

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் சோதனை இடப்பட்டதாக அளவீட்டு அலகுகள், நியமங்கள் திணைக்கள பொறுப்பதிகாரி பாலஸ்கந்தன் இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது,

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் நிறுத்தல் அளவை தொடர்பாக எமது திணைக்கள உத்தியோகத்தர்களினால் சோதனை நடத்தப்பட்டு வருகின்றது. இதில் இந்த வாரம் மேற்கொண்ட சோதனைகளின் போது நிறுவை அளவை தொடர்பான பிரச்சினை இருப்பதாக இனங்காணப்பட்ட வவுனியா மாவட்டத்தில் உள்ள 9 வர்த்தகர்களுக்கு எதிராக நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வவுனியா நீதவான் நீதிமன்றத்திலும் மன்னார் மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 6 வர்த்தகர்களுக்கு எதிராக எதிர்வரும் 21 ஆம் திகதி மன்னார் நீதவான் நீதிமன்றத்திலும் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள் ளதாக தெரிவித்தார்.

நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரை இடத்தவறியவர்கள் மாவட்ட செயலகத்தில் உள்ள எமது திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு முத்திரை இட்டுக் கொள்ளுமாறு தெரிவித்தார். (அ-2)

# அமெரிக்காவின் தீர்மானம் தமிழர்களுக்கு ஆதரவு தராது

## தமிழக மாணவர்களின் கோரிக்கைகளை ஆதரித்து லண்டனில் போராட்டம்




பிரித்தானியாவில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்க தீர்மானத்தை எரித்துள்ளனர்.

பல நூற்றுக்கணக்கான தமிழ் உணர்வாளர்கள் ஒன்று கூடி நடத்திய இவ் ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்காவினால் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக வைக்கப்பட்ட தீர்மானத்தின் நகல் வடிவத்தை சிலர் எரித்து அமெரிக்க தீர்மானத்திற்கு எதிர்ப்பைக் காட்டினர்.

அண்மை நாட்களாக தமிழ் நாட்டில் தொடர்ந்து பரவிக் கொண்டிருக்கும் மாணவர்களின் எழுச்சி தமிழீழ மக்களின் விரிவுக்காக சில கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்களால் உருவாக்கப்பட்டு தொடர்ந்து கொண்டிருக்கும் உண்ணாவிரதத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக நேற்று முன்தினம் லண்டனில் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

நூற்றுக்கணக்கான மாணவர்களும் தமிழ் உணர்வாளர்களும் கலந்து கொண்டுள்ள இவ் ஆர்ப்பாட்டத்தில் தமிழக மாணவர்களின் எழுச்சிக்கு ஆதரவளித்து அவர்கள் வைத்துள்ள 9 அம்சக் கோரிக்கைகளையும் ஆதரித்ததோடு அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தமிழர்களுக்கு ஆதரவை தராது எனவும் சில உணர்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய காலநிலையையும் பொருட்படுத்தாது நடத்தப்பட்ட இவ் ஆர்ப்பாட்டத்திலேயே ஒரு சிலரால் இவ்வாறு அமெரிக்க தீர்மானத்தின் நகல் எரிக்கப்பட்டுள்ளது. மீண்டும் 20 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மத்தள விமான நிலையம் இன்று திறந்து வைக்கப்படும்

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் இன்று காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அம்பாந்தோட்டை மத்தளவில் அமைந்துள்ள இவ்விமான நிலையத்தில் இலங்கை விமானி ஒருவரினால் செலுத்தப்படும் எயார் அரேபியா விமான சேவைக்குச் சொந்தமான ஜீ 9508 ரக பயணிகள் விமானம் முதல் விமானமாக தரையிறங்குகிறது.

திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக இந்த விமானத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் வருகை தரவுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரட்ண தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 2009 ஆம் ஆண்டு அடிக்கல் நடப்பட்ட இவ்விமான நிலைய வேலைகள் 2010 ஆம் ஆண்டு முதல் சைனா ஹாபர் பொறியியல் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தையும் விட 3500 மீற்றர் நீளமும் 75 மீற்றர் அகலமும் கூடுதலாக கொண்டதான ஓடுபாதை இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

45 மீற்றர் உயரமான கட்டுப்பாட்டுக் கோபுரம் இங்கு அமைக்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் கட்டமாக அமையவுள்ள ஓடுபாதையில் தரையிறங்கும் விமானங்களையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுப்பாட்டு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

நாளை மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் வெளிநாட்டு உள்நாட்டு விமான சேவைகள் தொடர்ந்தும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)





வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலயமட்ட எல்லே போட்டி அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் முதலாம் இடத்தைப் பெற்ற மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# ஒருநாள் கிரிக்கெட் போட்டி


# யாழ்.இந்துவிடம் வீழ்ந்தது கொக்குவில் இந்து அணி











கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற ஒருநாள் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 41.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக பங்குஜன் 80 பந்துகளில் 64 ஓட்டங்களையும், ஆதித்தன் 30 பந்துகளில் 34 ஓட்டங்களையும், நிஷாந்தன் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பாக மதுஷன் 9 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், பானுகோபன் 9 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், றுக்ஸ்மன் 9 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 43.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக கல்கோவன் 88 பந்துகளை எதிர்கொண்டு 57 ஓட்டங்களையும், சுஜிதன் 57 பந்துகளை எதிர்கொண்டு 30 ஓட்டங்களையும், வாமணன் ஆட்டமிழக்காமல் 32 பந்துகளை எதிர்கொண்டு 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக சிலோஜன், பங்குஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக யாழ். இந்துக் கல்லூரியின் வாமணனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் பங்குஜனும், சிறந்த பந்துவீச்சாளராக யாழ்.இந்துக் கல்லூரியின் மதுஷனும், சிறந்த களத்தடுப்பாளராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் சத்தியனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இந்தியா முழு...

சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட தமிழர்கள் இன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐதராபாத்தின் மாதாபூரில் உள்ள ஹைடெக் சிட்டி என்ற இடத்தில் நேற்று ஒருநாள் உண்ணாவிரதப்போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் தமிழர்களுக்கு நேர்ந்த கொடுமைகளை, பிற மாநில மக்களும் அறிந்து கொள்ளும் வகையில், இந்தி,தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் துண்டுப்பிரசுரங்களை அச்சடித்தும் விநியோகித்தும் வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இந்த போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். (எ-8)

## அரசின் பரி...

பல்வேறு சக்தி வாய்ந்த நாடுகள் எங்களுக்கு எதிராகப் பேசி வந்த போதிலும் இலங்கைக்கு இந்த வெற்றி கிடைத்துள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் விடுதலைப் புலிகளுடனான மோதல் முடிபுக்கு வந்ததிலிருந்து, மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை எட்டியுள்ள முன்னேற்றத்தை, பாரபட்ச மற்றகண்ணோட்டம் கொண்ட அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் அமெரிக்கா அடுத்த வாரம் தீர்மானம் கொண்டுவரவுள்ள நிலையில், மனித உரிமைகள் தொடர்பான பரிசீலனை அறிக்கையை இலங்கை சமர்ப்பித்துள்ளது.

அமெரிக்கா கடந்தாண்டும்இந்தியாவின் ஆதரவோடு இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கும் தீர்மானத்தை கொண்டு வந்தது.

இந்நிலையில் ஐ.நா.மனித உரிமைக் கவுன்சிலில் உள்ள அனைத்து உறுப்பு நாடுகளின் பரிந்துரைகளையும் இலங்கை நிராகரித்துள்ளதற்கு ஜெனிவாவில் உள்ள அமெரிக்கப் பிரதிநிதி வருத்தம் தெரிவித்துள்ளார். (எ-8)

## ஐ.நாவின்...

கப் பிரதிநிதி, சர்வதேச சட்டதிட்டங்களுக்கமைய இலங்கை அரசு நடந்து கொள்ள வேண்டுமென குறிப்பிட்டார்.

மனிதவுரிமைகள் தொடர்பில், பொலிஸ் மற்றும் தேர்தல் ஆணைக்குழுக்களை இலங்கை அரசு உடனடியாக அமைக்க வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை கூட இலங்கை அரசு நிறைவேற்ற மறுப்பது பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளது.

இலங்கை அரசு இதனை விட பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். மனிதவுரிமைகள் மீளாய்வுக் கூட்டங்களின் சிபாரிசுகளையும், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளையும், அமுல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (எ-8)

## இறுதி ரவை முடியும்...

காலை வரை பாரிய மோதல் ஒன்று இடம் பெற்றது.

எமது இராணுவ வீரர்களும் உயிர்ப்பலியானார்கள். அது குறித்து யாரும் கதைக்கவில்லை. இந்தப் பகுதியில் மிகவும் நெருக்கமான நிலையிலேயே யுத்தம் நடைபெற்றது.

இதன்போது எவரும் சரணடையவில்லை. இரவு பகலாக 48 மணி நேரம் மோதல் இடம் பெற்றது. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் சரணடைவதும் கடினமானது. மோதலில் இறங்கிய பின்னர் அந்த வழியில் செல்வதும் கடினமானது. ஏனென்றால் எமது வீரர்களும் கொமாண்டோக்களும் ஒவ்வொரு இடத்திலும் நுழைந்திருந்தார்கள்.

இது அவ்வாறானதொரு மோதலாக இருந்தது. இந்த மோதலில் இருந்து விலகுவதற்கும் சரணடைவதற்கும் சந்தர்ப்பம் இருக்கவில்லை. அவர் சரணடைய வேண்டும் என்று இருந்தால் அதற்குப் பல சந்தர்ப்பங்கள் இருந்தன. இதன்போது வேறுயாரும் சரணடைய முயற்சிக்கவில்லை.

இந்த மோதலின் போது தீவிரவாதிகள் சுமார் 400 க்கும் மேல் உயிரிழந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் சரணடையும் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

இறுதிக்கட்டத்தின் போது, 14-ம் திகதி அளவில் 85 ஆயிரம் பொதுமக்கள் சரணடைந்திருந்தனர். முல்லைத்தீவு களப்புப் பகுதியிலிருந்து தப்பி வந்து சரணடைந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் தீவிரவாதக் குழுத்தலைவர்கள் இருப்பதாகத் தெரிவித்தனர். பிரபாகரன் இருப்பதாகக் கூறவில்லை. அதன் பின்னர் யாரும் சரணடையவில்லை என அவர் குறிப்பிட்டார்.

சர்வதேசத்தின் தலையீடு இந்தச் சந்தர்ப்பத்தில் இருந்ததா? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், மீண்டும் பொய் வழக்கில் சிக்கி சிறைச்சோறு சாப்பிடுவதற்கு நான் விரும்பவில்லை என்றார். மேலும், அது தொடர்பில் ஊடகங்களில் வெளியான தகவல்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நீங்கள் எதைக் கண்டீர்களோ, அதையேதான் நானும் காண்கிறேன் எனவும் கூறினார்.

தற்போது இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் நாடுகள், போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தன.

கடற்புலிகளை எதிர்கொள்வதற்கும், புலிகளின் கடல் கலன்களை அழிப்பதற்கும் ஆயுத விநியோகத்தை தடுப்பதற்கும் பாரியளவில் அந்த நாடுகள் உதவிகளை வழங்கியிருந்தன.

இந்த நாடுகளின் உதவி இல்லாமல், எமக்கு இந்த யுத்தத்தை வெல்வது கடினமாக இருந்திருக்கும். இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் பாரிய உதவியினால் தான் யுத்தத்தை வெற்றி கொள்ள முடிந்தது.

இலங்கை அரசு அவர்களை உரிய முறையில் கையாளத் தவறியமையால்தான்அந்த நாடுகள் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன எனவும் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (எ-8)

## அமெரிக்கா சமர்ப்...

ஜெனிவாவில் தற்போது இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 22-வது கூட்டத்தொடரில் இலங்கை மீதான பிரேரணையை அமெரிக்கா கடந்த வியாழக்கிழமை உத்தியோக பூர்வமாக சமர்ப்பித்துள்ளது.

முன்னர் சமர்ப்பித்திருந்த நகல் பிரேரணையில் குறிப்பிட்ட விடயங்களில் சிறுமாற்றம் செய்யப்பட்டு மென்போக்குத்தன்மை கொண்டதாகவே புதிய பிரேரணை வரைபை அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது.

இவ்வாறு திருத்தங்களுடன் சமர்ப்பித்துள்ள அமெரிக்க பிரேரணை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோக பூர்வ நிலைப்பாடு என்ன? அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணையை இந்தியா ஆதரிக்குமா? என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விளக்கமளித்துள்ளார். அவர் இது தொடர்பாக தெரிவித்தவை வருமாறு,

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மனதார வரவேற்கின்றது. இந்தப்பிரேரணை தோற்காது. நிச்சயம் வெற்றியடையும்.

இலங்கை அரசபடைகளால் மனித உரிமைகள் மீறல்கள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. மீறப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் அமெரிக்கா சமர்ப்பித்துள் பிரேரணையானது இலங்கை அரசுமீது சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை வரவேற்றுள்ளது. அதை நடைமுறைப்படுத்தவும் ஆதரவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை அமெரிக்கா தனது பிரேரணையில் மீண்டும் எடுத்துக்கூறியுள்ளது. எனவே இதிலிருந்து இலங்கை அரசாங்கம் தப்பமுடியாது என்றார். (எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கி எழுந்த தமிழக மாணவர்களின் இன உணர்வை அடக்கி விட முடியாது

## சீமான் அறிக்கை



மனித குலம் தன் வரலாற்றுப் பாதையில் சந்தித்திராத ஒரு மாபெரும் இனப் படுகொலையை கடந்த 2009 ஆம் ஆண்டு முடிவுற்ற ஈழ விடுதலைப் போரில் சிங்கள பேரினவாத அரசு திட்டமிட்டு நடத்தி முடித்திருக்கிறது என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகமெங்கும் பரந்து வாழும் தமிழ்த் தேசிய இனத்தின் ஆன்மாவில் சுமக்கும் வலியாக ஈழத்தின் துயர் மாறியிருக்கிறது. மண்ணின் பூர்வீக குடிமக்களான எம் ஈழ உறவுகள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக அடிமை இனமாக மாற்றப்பட்ட அவலம் தமிழர்களின் மனச்சாட்சியை உலுக்கி இருக்கிறது.

தமிழ்த்தேசிய இனத்தின்பெருமை மிக்க அடையாளமாக திகழ்ந்த எம் ஈழத்து உறவுகள் நாடிழந்து, உறவுகளை களத்தில் பலி கொடுத்து விட்டு வலி மிகுந்த ஏதிலிகளாக உலகமெங்கும் வாழ்ந்து வரும் துயரத்தினை ஒவ்வொரு தாயகத் தமிழனும் இணைந்தே சுமக்கிறார்கள் என்பதற்கும் எம் தாய்நிலமான ஈழ மண்ணில் நிகழ்ந்திருக்கின்ற கொடிய இனப் படுகொலைகளுக்கு பன்னாட்டுச் சமூகத்திடம் நீதி கேட்க திரண்டு விட்டார்கள் என்பதற்கும் நேரடியான சாட்சியாக தமிழக அனைத்துக் கல்லூரி மாணவர்களின் தீரம் மிக்க அறவழிப் போராட்டம் அமைத்து விட்டது.

கடந்த 10 தினங்களாக தன் சொந்த இரத்த உறவுகளான ஈழ சொந்தங்களின் அழிவினை நெஞ்சிலே நிறுத்தி பொங்கும் கண்ணீரை தன் இதயத்தில் இருத்தி உண்ணாமல். உறங்காமல் என் தம்பி, தங்கைகளான அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியர் தமிழகமெங்கும் நடத்திய உண்ணா நிலைப் போராட்டம் உலகமெங்கும் எட்டிவிட்டது.

எவ்வித அரசியல் சார்பில்லாமல் தமிழின உணர்வோடு கம்பீரமாக கல்லூரி மாணவ, மாணவியர் நடத்திய போராட்டங்கள் ஆண்டு கொண்டிருக்கிற மத்திய மாநில அரசை அச்சுறுத்திய காரணத்தினால் தான் கல்லூரிகள் காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கின்றன.

யாரை காப்பாற்ற அரசுகள் கல்லூரிகளின் கதவுகளை முடுகின்றன என்பதற்கான பதிலை நெஞ்சுரத்தோடு களத்தில் நிற்கும் தமிழக கல்லூரி மாணவ, மாணவியரிடத்தில் அரசுகள் தெரிவிக்குமா என்பது தான் எங்கள் கேள்வி.

தொடர்ந்து களம் காணும் தமிழக கல்லூரி மாணவ, மாணவியர் போராட்டத்திற்கு மத்திய மாநில அரசுகள் எவ்விதமான பதிலையும் அளிக்காமல் கல்லூரிகளை மூடி ஒடுக்க நினைப்பது தோல்வியில் தான் முடியும் என்பது எமது அழுத்தமான நம்பிக்கை.

கல்லூரிகளின் கதவினை மூடலாம். வகுப்பறையின் வாசல்களை அடைக்கலாம். ஆனால், பொங்கியெழுந்து திரண்டுடிருக்கும் எம் தமிழக கல்லூரி மாணவ, மாணவியரின் இனவுணர்வினை எந்த அடக்கு முறையாலும் வீழ்த்த முடியாது.

கல்லூரியின் கதவுகள் மூடப்பட்டாலும் தன் தொப்புள் கொடி சொந்தங்களுக்காக தொடர்ந்து களத்தில் நிற்க துணிந்திருக்கிற தமிழக அனைத்து கல்லூரி மாணவ, மாணவியரை நான் மனதார பாராட்டுகின்றேன்.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஜெனீவாவில் ஐ.நா. பெருமன்றத்தில் வரும் வாக்கெடுப்பிற்கு முன்னதாக தமிழினத்திற்கு சாதகமான அதிர்வுகளை ஏற்படுத்த தொடர்ச்சியான போராட்டங்கள் மிக அவசியமாக இருக்கின்றன.

அங்கே ஈழத்தில் நடந்தது வெறும் போர்க்குற்றமல்ல. அது திட்டமிட்ட இனப்படுகொலை என்பதற்காகவும் இனப் படுகொலைகள் குறித்த சுதந்திரமான சர்வதேச நீதி விசாரணை ஒன்றினை நடத்திட வேண்டும் என்பதற்காகவும் பொது வாக்கெடுப்பு நடத்தி தமிழர்களின் உயிர் கோரிக்கையான தனித் தமிழீழ நாட்டினை அமைத்திட வேண்டும் என்பதற்காகவும் இலங்கை ஜனாதிபதியை போர்க்குற்றவாளியாக அறிவித்து சர்வதேச நீதிமன்றம் முன் நிறுத்திட வேண்டும் என்பதற்காகவும் இலங்கை மீது இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் பொருளாதார தடை விதிக்க கோரியும் தமிழக அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியர் போராடி வருகின்றனர்.

எவ்வித அரசியல் அமைப்பினை சாராது தமிழக அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியர் தன்னெழுச்சியாக உருவாக்கி இருக்கும் தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு வருகிற மார்ச் 20 ஆம் திகதி தமிழகமெங்கும் ஒரு கோடி மாணவ, மாணவியர் தொடர் முழக்க போராட்டத்தை நடத்த அழைப்பு விடுத்திருக்கிறது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

## பெண்களுக்கெதிரான குற்றங்களை தடுக்க விரைவில் சட்டம்-சோனியா



பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க விரைவில் சட்டம் இயற்றப்படும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உறுதிபடத் தெரிவித்தார்.

வளர்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதில் காங்கிரஸ் தலைமையிலான அரசு ஒரு புரட்சியையே ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் பெருமிதத்துடன் கூறினார்.


மேற்கு வங்க மாநிலம் மால்டாவில் உள்ள கனி கான் செத்ரி பொறியியல் கல்வி நிறுவனத்தில் புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டும் விழா சனிக்கிழமை நடை பெற்றது. இந்த நிகழ்ச்சியில் சோனியா காந்தி கருத்து தெரிவிக்கையில்,

பெண்கள் முன்னேற பெண்களுக்கு சமவுரிமை அளிக்க வேண்டும் என்பதற்காக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முக்கிய கிராமப்புற பெண்கள் யாரையும் சார்ந்து இருக்காமல் தங்கள் சொந்த உழைப்பில் முன்னேற பல வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

இந்த பட்ஜெட்டில் கூட பெண்களுக்கான சிறப்பு வங்கி அமைக்க ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெண்கள் சிறு தொழில் தொடங்கவும் வர்த்தக நிறுவனங்களை ஏற்படுத்தவும் கடன் வழங்கப்படும்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்கான மசோதா விரைவில் நிறைவேற்றப்படும் என்று சோனியா தெரிவித்தார்.(அ)

பாரதச் செய்தி



கேரள மாநிலம் கோட்டயத்தில் நடைபெற்ற தபால் தலை வெளியீட்டு விழாவில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் கபில் சிபல், மாநில முதல்வர் உம்மன்சாண்டி ஆகியோர் கலந்து கொண்டதை படத்தில் காணலாம்.

## கவிஞர் வைரமுத்துவின் தந்தை காலமானார்

கவிஞர் வைரமுத்துவின் தந்தை உ.ராமசாமித்தேவர் (வயது 85) தேனி மாவட்டம் வடுகபட்டியில் நேற்று முன்தினம் பிற்பகல் காலமானார்.

அவருக்கு அங்கம்மாள் என்ற மனைவியும் வைரமுத்து உள்ளிட்ட 2 மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். இவர்கள் தவிர ஏற்கனவே ஒரு மகன் காலமாகிவிட்டார்.

இவருக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, நடிகர்கள் ரஜினி, கமல், விவேக், இயக்குநர் கே.பாலச்சந்திரர் உள்ளிட்டோர் தொலைபேசியில் கவிஞர் வைரமுத்துவுக்கு ஆறுதல் தெரிவித்தனர். (அ)

## கொலைப்பாதகனுக்கு தூக்குத்தண்டனை

மத்திய பிரதேச மாநிலம் போபாலில் கடந்த மாதம் 8 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். படுகொலை செய்யப்பட்ட சிறுமியின் உடல் மாநில உள்துறை அமைச்சர் உமா ஷங்கர் குப்தாவின் வீடு அருகே கைப்பற்றப்பட்டதால் இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தியதில் நந்த கிஷோர் வால்மீகி என்பவர் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணை மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தில் நடைபெற்றது. கடந்த வியாழக்கிழமை நீதிபதி சுஷ்மா கோஷ்லா தீர்ப்பு வழங்கினார். அதில் குற்றவாளி நந்தகிஷோருக்கு இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (அ)

# இந்தியாவில் ரயில் நிலையங்களை தகர்க்க தீவிரவாதிகள் சதித்திட்டம்

## விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது

(புதுடில்லி)

பாகிஸ்தானின் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் இயக்கம் இந்தியாவில் செயற்படும் உள்நாட்டு தீவிரவாதிகளுடன் சேர்ந்து பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஐதராபாத்தில் சமீபத்தில் இரட்டை குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்தன. இதில் 19 பேர் பலியானார்கள். இந்த தாக்குதலுக்கு இந்தியன் முஜாகிதீன் இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. கசாப், அப்சல்குருவை தூக்கிலிட்டதற்கு பழிவாங்க இந்த தாக்குதலை அரங்கேற்றி இருப்பது தெரிய வந்தது.

புனே தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள்தான் ஐதராபாத் தாக்குதலிலும் ஈடுபட்டுள்ளனர். புனே தாக்குதல் வழக்கில் சிலர் பிடிபடாமல் தலைமறைவாக உள்ளனர். அவர்கள்தான் ஐதராபாத் தாக்குதலை அரங்கேற்றி உள்ளனர். இவர்களுக்கு பெங்களூரில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்திலும் தொடர்புள்ளது தெரிய வந்தது.

கடந்த ஆண்டு பெங்களூரில் குண்டு வெடிப்பு நடத்த சதித்திட்டம் தீட்டியதாக சோயிப் அகமது மிர்ஹா, அப்துல் ஹகீம் ஜமதார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ஆந்திரா, கர்நாடகம், மராட்டியத்தில் அரசியல்வாதிகள், பொலிஸ் அதிகாரிகள், பத்திரிகையார்களை கடத்திச் செல்ல திட்டமிட்டிருந்தனர்.

கைதான மிர்ஹாவிடம் தொடர்ந்து விசாரித்தபோது தானும் தனது நண்பருமான இம்ரான் என்பவரும் டில்லி, மும்பை, சண்டிகார், பிரதாப்கார், மிர்ஸாபூர் ஆகிய 5 ரயில் நிலையங்களில்தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருந்ததாக திடுக்கிடும் தகவலை வெளியிட்டனர். இதற்காக இருவரும் 5 நகரங்களுக்கு சென்று இடங்களை பார்வையிட்டதாகவும் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானின் லஷ்கர்-இ-தொய்பா இயக்கம் திட்டம் வகுத்து கொடுத்ததாகவும் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் பட்டியலில் இந்த 5 ரயில் நிலையங்களும் இடம்பெற்று இருப்பதாகவும் கூறினார்.

பாகிஸ்தான் மற்றும் சவுதி அரேபியாவில் இருந்து தங்களுக்கு இந்த தாக்குதலுக்கான உத்தரவு வந்ததாகவும் தெரிவித்துள்ளனர். ஆனால், அதற்குள் மிர்ஹாவை கர்நாடக பொலிஸார் கைது செய்து விட்டனர். இம்ரான் தலைமறைவாக இருக்கிறார். இதேபோல் மேலும் பல தீவிரவாதிகள் பிடிபடாமல் தலைமறைவாக இருக்கிறார்கள்.

அவர்கள் பாகிஸ்தான் போன்ற ஏனைய வெளிநாடுகளுக்குதப்பிச் சென்று இருக்கலாம். மீண்டும் தாக்குதல் நடத்தும் சதித்திட்டத்துடன் ஊடுருவலாம் என்று உளவுத் துறை உஷார்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் பலர் முக்கிய தீவிரவாதிகள் ஆவார்கள். பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. உதவியுடன் தொடர்ந்து பாகிஸ்தான் தீவிரவாதிகளும் உள்நாட்டு தீவிரவாதிகளும் செயற்பட்டு வருவதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு துணிவு இல்லாத காரணத்தால்,
உலகின் பல திறமைகள் சிதறிப் போகின்றன.
-சிட்னி ஸ்மித்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வட மாகாணத்தின் அரச அதிபர்கள் தமது அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும்

இலங்கையின் வேறு எந்த மாகாணத்திலும், மாவட்டங்களிலும் இல்லாத அளவில் வட மாகாணத்தில் மாவட்ட அரச அதிபர்களின் வகிபாகம் காத்திரமாக இருப்பதைக் கூறித்தானாக வேண்டும்.

கொழும்பு மாநகருக்குச் சென்று அங்குள்ள மக்களிடம் கொழும்பு மாவட்டத்தின் அரச அதிபருக்கு என்ன பெயர் என்று கேட்டால், கொழும்பு மாவட்டத்துக்கு அரச அதிபர் என்றறொருவர் இருக்கிறாரா? என்று மக்கள் திருப்பிக் கேட்பார்கள். அந்தளவில் கொழும்பு மாநகரில் அரச அதிபர் முக்கியத்துவம் கொண்டிருப்பதில்லை.

ஆனால், வட மாகாணத்தின் நிலைமை அதுவன்று. இங்கு எடுத்ததெற்கெல்லாம் அரச அதிபர் என்ற பதவியே உச்சாடனம் செய்யப்படும்.

நிவாரணம் கேட்பது முதல் மகஜர் கையளிப்பு வரை அனைத்துக்கும் அரச அதிபரே சீமான்.

இதுதவிர, மீள்குடியேற்றம் முதல் அகதி முகாம்களின் கணக்கெடுப்பு, அபிவிருத்திப் பணிகளின் முன்னெடுப்பு, சிறுவர், பெண்கள் உள்ளிட்டோரின் உரிமைப் பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவம் என அனைத்துக்குமான அரசின் புனித தலைவராக அரச அதிபரே இருப்பார்.

இதன் காரணமாக வட மாகாணத்தில் உள்ளடங்கும் மாவட்டங்களில் இருக்கக்கூடிய அரச அதிபர்கள் மக்கள் மத்தியில் அதிகம் பேசப்படுவோராக இருந்தனர்.

இவையாவற்றுக்கும் மேலாக, வட மாகாணத்துக்கு வருகை தருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வட மாகாணத்தின் மாவட்ட அரச அதிபர்களைச் சந்தித்து அந்தந்தப் பிரதேசங்களின் கள நிலைமைகளைக் கேட்டறிந்து கொள்வர்.

இதன் நிமிர்த்தம் ஊடகங்களும் இவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தன. போதாக்குறைக்கு வட மாகாணத்தில் எந்த நிகழ்வு நடந்தாலும் அதில் அரச அதிபரை பிரதம விருந்தினராக அழைப்பதில் ஒரு பெரும் மகிழ்வு. அதேநேரம் அந்த நிகழ்வில் அரச அதிபர் ஆற்றுகின்ற உரைக்கு இருக்கக்கூடிய மவுசு சொல்லுந்தரமன்று.

இதையெல்லாம் ஒரு கணம் நினைத்துப் பார்க்கும் போது சமகாலத்தில் வட மாகாணத்தில் உள்ள மாவட்ட அரச அதிபர்கள் அடக்கி வாசிப்பது போல அல்லது அஞ்ஞாதவாசத்தை மேற்கொள்வது போன்ற உணர்வு தெரிகின்றது.

இஃது அவ்வளவு நல்லதல்ல, கருத்துக்களை தெரிவிப்பது ஆபத்தாகும் என்று ஒதுங்கிக் கொள்வது நியாமற்றதாகும்.

கடந்த ஒரு சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் திருத்தப்படும் பாலத்துக்குள் இருவர் வீழ்ந்து பலியாகிப் போயினர்.

உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாததன் காரணமாக இந்த விபத்து நடந்துள்ளதாயினும், இது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைள் என்னவென்பதை யாழ்.மாவட்ட அரச அதிபர் பொது மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அதேசமயம் வீதிகளில் வெட்டப்பட்ட கிடங்குகள் தொடர்பிலும் கவனம் செலுத்த கடும் உத்தரவு பிறப்பிப்பது அவசியம். இல்லையேல் அகால மரணங்களும் அவலக் குரல்களும் குறையப் போவதில்லை.

# இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிப்பது தமிழர்களையே பாதிக்கும்

## காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் விளக்கம்

இலங்கை அரசின் கெடுபிடி மற்றும் ஆதிக்கம் அதிகரித்தபொழுது ஆயுதமேந்திய இலங்கை தமிழர் குழுக்களுக்கு எல்லாவித உதவியும் இந்தியாவில் செய்து கொடுத்தது இந்திரா காந்தியும் ராஜீவ் காந்தியும்தான். அவர்கள் ஆதரவு இல்லாமல் இருந்தால் ஆயுத மேந்திய தமிழ்ப்போராட்டம் இலங்கையில் நீர்த்துப்போயிருக்கும் என தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

ராஜீவ்காந்தி, ஜெயவர்த்தன ஒப்பந்தம் இலங்கை வாழ் தமிழர்களுக்காக என்பதை பலர் இன்று மறந்துவிட்டாலும் இந்தக்காலகட்டத்தில் நினைவூட்டுவது எனது கடமை.

இன்று வடக்குப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழர்களுக்கு நல்வாழ்வு, பாரபட்சமற்ற வாழ்க்கை, குடியமர்ப்பு, சிங்களவர்களுக்கு சமமான அரசியல் சமவுரிமை, சுருக்கமாக ராஜீவ்-ஜெயவர்த்தன கண்ட ஒப்பந்தத்தைமுழுமையாகஇலங்கை அரசுநிறைவேற்றுதல் வேண்டும். நடந்துமுடிந்த போரில் நடைபெற்ற மனிதவுரிமை மீறல்களை எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பாரபட்சமற்ற ஒரு விசாரணையும் இந்த குற்றங்களை செய்தவர்கள் மீது நடவடிக்கையும் தண்டனையும் கொடுத்தாக வேண்டும் என்பதும் பாலியல் பலாத்காரம், வன்கொடுமை கொலை போன்ற செயல்களால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் பிரபாகரன் குடும்பம் உட்பட உண்மைநிலை கண்டறியப்பட வேண்டும் எனக் கோரிக்கைகளில் காங்கிரஸ் கட்சிக்கும் மத்தியரசுக்கும் எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை.

அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு எதிராக இந்தியா வாக்களிக்காது என்ற கொள்கையை மாற்றிக் கொண்டு கடந்த முறை வாக்களித்தது தமிழர்களின் நலனுக்காக. அப்போதும்கூட வாக்களிக்கும் என்கிற செய்தி கடைசி நேரத்தில்தான் இந்திய அரசால் சொல்லப்பட்டது. இன்று பொருளாதாரத் தடை இந்தியா மட்டும் தான் விதிக்கமுடியும். அப்படி விதித்தால் இந்தியா இன்றைக்கு தமிழர் பகுதிகளுக்கு 50 ஆயிரம் வீடுகள், 10 ஆயிரம் சைக்கிள்கள், ஒரு இலட்சம் விதை மூட்டைகள், 500 ட்ரக்டர்கள் மற்றும் அம்புலன்ஸ் ஊர்திகள், மருத்துவ உபக ரணங்கள் கொடுத்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல இடிந்து போன பாடசாலைகள், பாழ்பட்டுக் கிடக்கின்ற மருத்துவமனைகள் போன்றவற்றை இந்திய அரசு கட்டிக் கொண்டிருக்கின்றது.

ரயில் தண்டவாளங்கள் யாழ்ப்பாணம் பகுதியில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் இந்திய தூதரகம் திறக்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டும் இதற்காக 500 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் தடைபட்டால் பரவாயில்லை என்று பொருளாதாரத்தடை கேட்பவர்கள் நினைக்கிறார்களா? இலங்கை அரசு சீனா போன்ற நாடுகளிடமிருந்து உதவி பெறமுடியும். ஆனால் இலங்கை வாழ் தமிழர்களுக்கு இந்தியாவால் மட்டும்தான் உதவி செய்ய முடியும் என்று தெரிந்தும் ஏன் இவர்கள் அரசியலுக்காக பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை இந்தியா மட்டும் செய்யமுடியாது என்பதை அறிந்தவர்கள்தான் இவர்கள். ஒரு சுயமான நாட்டினுடைய உள்நாட்டுப் பிரச்சினையில் சில தீர்மானங்கள் ஐக்கிய நாட்டு சபையின் பாதுகாப்பு சபையினால் அங்கீகரிக்கப்படவேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு நேசக்கரம் நீட்டி பல்வேறு உதவிகளை செய்து வருகிற காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவர்களையும் பிரதமரையும் இழிவுபடுத்துவதையும் கொடுமையாக சித்திரிப்பதையும் நாகரிகமான சமூகத்தினரால் ஏற்றுக் கொள்ள முடியாது.

8 இலட்சம் இந்திய வம்சாவளித் தமிழர்கள் சிங்களவர்களின் மத்தியில் பெருமளவில் வாழ்கிறார்கள் என்பதையும் இந்திய - இலங்கை உறவு துண்டிக்கப்பட்டால் இலங்கை வாழ் தமிழர்களை ஏன் என்று கேட்பதற்கு வேறுநாடு இல்லை என்பதையும் நண்பர்கள் உணர வேண்டும். நம்முடைய செயல்கள் இலங்கைத் தமிழர்களுக்கு எவ்வித பாதிப்பையும் எற்படுத்திவிடக் கூடாது என்கிற அன்பான வேண்டுகோள் இது.

ஆகவே மாணவ நண்பர்கள் உண்மை நிலையை அறிந்திட வேண்டும். போராட்டத்தை கைவிடவேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை முன்புபோலவே இந்தியா ஆதரிக்கும் என்று நான் நம்புகிறேன். அது நடக்கும் என்று உறுதியோடு இருக்கிறேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் நிலைப் பாடும் அதுதான். காங்கிரசுக்கு எதிராக எவ்வளவு முயற்சி செய்து வாளையும் வேலையும் சுழற்றினாலும் உண்மை ஒருநாள் வெல்லும். இலங்கைத் தமிழர்களுக்கு தேவையான உரிமைகளை இந்திய அரசு பெற்றெடுத்து தருகிற பொழுது இலங்கைத் தமிழர்கள் எங்களை வாழ்த்துவர். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார். (அ)

# உயிருக்காக போராடும் யுவதிக்கு உதவுங்கள்

(புதுக்குடியிருப்பு)



இரு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் யுவதியைக் காப்பாற்ற உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு 2ஆம் வட்டாரத்தில் வசிக்கும் தங்கவேல் சாதனா (வயது 23) என்ற குறித்த யுவதியே இவ்வாறு இருசிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் உயிருக்குப் போராடிக்கொண்டுள்ளார். அவரைக் காப்பாற்ற உதவுமாறு உருக்கமான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குறித்த யுவதிக்கு சிறுநீரகப்பாதிப்பு காரணமாக பல மாதங்களாக சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்ற நிலையில் தற்போது இரு சிறுநீரகங்களும் செயலிழந்து இவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.

மேலதிக சிகிச்சைகளை மேற்கொள்ளமுடியாத பொருளாதார நிலைமையில் உள்ள குறித்த யுவதிக்கு சிறுநீரக மாற்று சிகிச்சை செய்யவேண்டிய கட்டாய சூழ்நிலையில் சிறுநீரக உதவியோ அல்லது பண உதவியோ கோரப்பட்டுள்ளது. பண உதவியை இலங்கை வங்கியின் 72016251 என்ற கணக்கு இலக்கத்திற்கு வைப்புச்செய்து சாதனாவின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்குமாறு விநயமாக வேண்டப்பட்டுள்ளது.

இதற்கமைய இவருக்கு உதவவிரும்புவோர் 0770393100 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது 0772465472 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ-5)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மனம் ஒரு பொக்கிஷம்



ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவுண்டு. அந்த விளைவிலிருந்து யாரும் தப்பமுடியாது. ஒவ்வொருவரும் தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, உடலுக்கோ, உயிருக்கோ தீங்கு நேராவண்ணம் நடந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் அமைதியும் இன்பமும் ஏற்படும். அறிவு வளர்ச்சிக்கும் வழி ஏற்படும். இன்றேல் அமைதி குன்றி வளர்ச்சி தடையுறும்.

அவரவர் செய்யும் தவறுகள் தான் மதவாதிகளால் பாவங்கள் என்றும் சிந்தனையாளர்களால் தவறுகள் என்றும் அரசியல்வாதிகளால் குற்றங்கள் என்றும் கூறப்படுகின்றன. இந்த மூன்றுமே ஒரே பொருளைக் குறிப்பதுதான்.

நாம் ஒருமுறை ஒரு செயலைச் செய்துவிட்டால் அது நமது உடலுறுப்புக்களில் பதிந்து மீண்டும் அதையே செய்யத் தயாராகிவிடும். இந்தப் பதிவு எண்ண அழுத்தமாக மூளையிலும் பதிந்து விடுகிறது. அதுவுமின்றி சந்ததித் தொடர்புக்குக் காரணமாக உயிர் வித்திலும் அது பதிந்துவிடும். ஆகவேதான் தீமையைத் தவிர்த்து நல்லதே செய்ய நாம் பழகிக்கொள்ளவேண்டியிருக்கிறது. இதற்குத்தான் ஒழுக்கம் என்று பெயர்.

பிறருக்கு எவ்வகையிலும் தீமை ஏற்படாதபடி எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையும் ஒழுங்குபடுத்திக்கொண்டு வாழ்வதுதான் ஒழுக்கவாழ்வு ஆகும். [illegible] துன்பத்தையேதான் கொடுக்கும். [illegible] இன்பம் தரும் நற்செயல்களிலேயே ஒருவன் ஈடுபடவேண்டுவது அவசியமாகிறது.

## அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

அதிவேக நெடுஞ்சாலையில் இடம் பெற்ற வீதி விபத்தில் 43 வயதான வியாபாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தின் போது காயமடைந்த அவ்வியாபாரியின் மனைவி மற்றும் மகள்மார் இருவர் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொட்டாவையிலிருந்து காலி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வான், பின்னதுவ பிரதேசத்தில் ஜீப் ஒன்றுடன் மோதுண்டதில் இவ் விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த நிலையில் வாகனத்தில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த கணவன் மனைவி மற்றும் மகள்மார் இருவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த வியாபாரி உயிரிழந்துள்ளார். ஜீப் வண்டியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைகளை வெட்டி குளிர்சாதன பெட்டியில் வைத்து கொடூரம்

சீனாவின் நிர்வாக நகரமான ஹொங்கொங்கின் தாய் கோக் சூயி பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பில் வசித்து வந்த சாவோ விங்-கி மற்றும் அவரது மனைவி சியுயுவெட்-யீ ஆகிய இருவரையும் கடந்த சில நாட்களாகக் காண வில்லை.

இந்நிலையில் பொலிஸார் நேற்று முன்தினம் நடத்திய சோதனையில் அந்த வயது முதிர்ந்த தம்பதியரின் தலைகள் அவர்களின் வீட்டில் உள்ள குளிர்சாதன பெட்டியில் இருந்தது தெரியவந்தது.

இரத்தம் சொட்டச் சொட்ட இருந்த அந்த தலைகளை பொலிஸார் கைப்பற்றினர். மேலும் அங்கு பதிவான தடயங்களும் சேகரிக்கப்பட்டன. தொடர்ந்து நடத்திய சோதனையில் குடியிருப்பின் ஏனைய பகுதிகளில் அந்த தம்பதியரின் உடல் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன.

அவர்களை கொலை செய்ய பயன்படுத்திய கத்திகளும் கைப்பற்றப்பட்டன. உடலின் ஒரு சில பாகங்களைக் காணவில்லை. நெஞ்சைப் பதற வைக்கும் இந்த கொடூர கொலை தொடர்பாக பொலி ஸார் வழக்குப் பதிவு செய்து அந்த தம்பதியரின் 29 வயது மகன் மற்றும் 35 வயதான மற்றொரு நபரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# பேருந்து விபத்தில் 16 பேர் உயிரிழப்பு



ஈகுவடோர் நாட்டின் டுன்கராஹு மாகாணத்தில் இருந்து ஜீன்ஸ் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் 36 பேர் குயகுயில் நகரத்தில் நடைபெறும் கண்காட்சிக்கு பேருந்தில் சென்று கொண்டிருந்தனர்.

நேற்று முன்னரும் குயாஸ் மாகாணத்தில் இ.ஐ.நெடுஞ்சாலை பாலத்தின் மீது இந்த பேருந்து சென்று கொண்டிருந்தது. அப்போது கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 16 பயணிகள் உயிரிழந்துள்ளனர். மேலும் 25 பயணிகள் காயமடைந்தனர்.

மோசமான வானிலையே இந்த விபத்துக்கு காரணம் என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் கூறினார்கள். இந்த விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சீனாவில் ஒரு குழந்தை திட்டத்தால் 330 மில்லியன் கருக்கலைப்புக்கள்

சீனாவில் ஒரு குடும்பம் ஒரு குழந்தை என்ற குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தால் இதுவரை 330 மில்லியன் (33கோடி) கருக்கலைப்பு இடம் பெற்றுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது

உலகிலேயே மக்கள் தொகை பெருக்கத்தில் முதலிடம் பெறுவது சீன நாடாகும். இது குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த கடந்த 1980 ஆம் ஆண்டில் அரசின் குடும்ப கட்டுப்பாட்டுத்திட்டத்தில் ஒரு குடும்பம் ஒருகுழந்தை என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நகர்ப்புறங்களில் மக்கள் ஒரு குழந்தையும் கிராமப்புறங்களில் முதல் குழந்தை பெண்ணாக இருந் தால் மற்றொரு குழந்தையும் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். மீறியவர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டது

இத்திட்டம் அமுலுக்கு வந்த கடந்த 40 வருடங்களில் ஏறத்தாழ 330 மில்லியன் கருக்கலைப்புகள் சீனாவில் செய்யப்பட்டுள்ளன என்று அரசின் கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனால் உழைப்பாளர்கள் தொகுப்பு குறைகிறது, முதியோரின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது. மேலும் இத்திட்டம் செயற்படுத்தப்படும் விதம் கடுமையானது என்பது போன்ற குறைகளை மனித உரிமைக்கழகங்கள் முன் வைத்துள்ளன. ஆயினும் இத்திட்டத் தினை கைவிட தயாராக இல்லை (அ-5)




# புதிய போப் பிரான்சிஸ் நாளை பதவியேற்பு

(ரோம்)

வத்திகானில் நாளை நடை பெறவுள்ள புதிய போப் பதவி ஏற்பு விழாவில் 10 இலட்சம் பேர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய போப் ஆண்டவராக பிரான்சிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் ஆர்ஜென்டீனாவை சேர்ந்த கர்தினால் ஆவார். இவர் போப் ஆண்டவராக வருகிற நாளை சென் பீற்றர் சதுக்கத்தில் பதவி ஏற்கிறார்.

எனவே விழாவுக்கு வருகை தருபவர்கள் முதலில் ரோம் நகருக்கு வந்து அதன்பின்னர் வத்திகானுக்கு செல்கின்றனர். ஆகவே உலகம் முழுவதும் இருந்து வருபவர்களுக்கு போதிய வசதிகள் செய்து தர ஏற்பாடுகள் நடைபெறுவதாக இத்தாலி அரசு தெரிவித்துள்ளது.

அவரது பதவி ஏற்பு விழாவில் பங்கேற்க வத்திகான் நகருக்கு சுமார் 10 இலட்சம் பேர் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய போப் ஆண்டவராக பதவி ஏற்றவுடன் தனது முதல் திருப்பலியை தொடங்கி பிரார்த்தனையில் ஈடுபடுவர்.


இவர் பதவி ஏற்கும் நாளைய தினத்தை இயேசுகிறிஸ்துவின் தந்தை சென். ஜோசப் நினைவாக இத்தாலியில் தந்தையர் தினம் கொண்டாடப் படுகின்றது. (அ)

# ஹெலிகொப்டர் விபத்து; 3 இராணுவத்தினர் பலி

ரஷ்யாவில் மி-8 இராணுவ ஹெலிகொப்டர் 4 வீரர்களுடன் கஹங்களா இராணுவ தளத்திலிருந்து புறப்பட்டது. இந்த ஹெலிகொப்டர் செசன்யா பகுதியில் பறந்து கொண் டிருந்தபோது கடுமையான மூடு பனி யின் காரணமாக விபத்துக்குள்ளானது.

இதில் பயணம் செய்தவர்களில் 3 வீரர்கள் உயிரிழந்தனர். ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று இராணுவ அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். (அ)

# உலகின் தட்டையான மலை இதுதான்...



(புயுனஸ் ஏரேஸ்)

உலகில் காணப்படும் ஒரேயொரு தட்டையான மலை குறித்த தகவல் கள் வெளியிடப்பட்டு பெரும் ஆச் சரியத்தை தோற்றுவித்துள்ளது.

மலைகள் என்றாலே அதன் கூம்பு வடிவம் தான் முதலில் நினைவுக்கு வரும். எனினும் மலை முற்றிலும் மாறுபட்ட வடிவத்தில்காணப்படுகிறறொறைனா மலை என்று சொல்லப்படுகின்ற மலையொன்று ஸ்பெயினில் அமைந் துள்ளது.

31 கிலோ மீற்றர் பரப்பளவு டைய இந்த மலை உயரமானதுடன் மலையின் உச்சிப்பகுதி தட்டை யான சமதரை போன்று காட்சி தருகின்றது.

இதன் இன்னொரு சிறப்பம் சமாக முக்கோண வடிவில் காணப்படும் மேற்பரப்பின் மூலைகள் ஒவ்வொன்றும் வெனிசுலா, பிரேசில் மற்றும் குயானா ஆகிய நாடுகளை நோக்கி அமைந்திருக்கின்றமை குறிப்பிடப்படுகின்றது. (அ-5)

# ஐ.நா. பெண்கள் அமைப்பின் தலைவி பதவி விலகுகின்றார்



ஐக்கிய நாடுகளின் பெண்கள் அமைப்பின் தலைவராக இருந்தவர் மிசேல் பெசெலெட். ஐக்கிய நாடுகளின் பொது சபையால் கடந்த 2010 ஆம் ஆண்டு யூலை 2 ஆம் திகதி இந்த அமைப்பு தொடங்கப்பட்டது. இது பெண்கள் சமத்துவம் மற்றும் பெண்கள் மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்டதாகும். மிசேல் பெசெலெட் 1951 ஆம் ஆண்டு பிறந்தவர் ஆவார். சிலி நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான இவர் ஐக்கிய நாடுகளின் பெண்கள் அமைப்பின் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் இப்போது பதவியில் இருந்து விலக முடிவு செய்துள்ளார். இந்தத் தகவலை ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், அவரின் ஈடு இணையில்லாத சேவைக்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பதவிக்கு அவர் மிகப்பொருத்தமானவர் என்றார்.

சமீபத்தில் நாட்டில் அடுத்த ஜனாதிபதி குறித்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் மிசேல் பெசெலெட் முதல் இடத்தை பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

# லண்டனில் கறுப்பு மரணத்தின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

லண்டனில் கி.பி.1348 ஆம் ஆண்டில் மட்டும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் பிளேக் நோயால் உயிரிழந்தமையால் இவர்களது இறப்பு கறுப்பு என கூறப்படுகிறது.

இவர்களில் 50 ஆயிரம் பேரின் எலும்புக் கூடுகள் இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்று அகழ்வியல் ஆராய்ச்சி நிபுணர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் எலும்புக்கூடுகள் (12) சில சார்ட்டர் ஹவுஸ் சதுக்கத்தின் கீழே தோண்டும் போது கண்டறியப்பட்டது.

இனி எலும்புக்கூடுகளில் ஆய்வு நடத்தப்பட்டு இவை பிளேக் நோயினால் இறந்தவர்களின் உடல்கள் தான் என்பது உறுதி செய்யப்படும்.

மேலும் இவற்றின் பழைமையும் கண்டு பிடிக்கப்படும் இவை இருந்த புதைகுழியின் ஆழம், புதைகலம் (Pottery) போன்றவற்றையும் ஆராயப்படும். இதுபோல கடந்த 1980 ஆம் ஆண்டில் ஸ்மித்ஃபீல்டு என்ற இடத்தில் எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன.

1346 ஆம் ஆண்டில் ஆசியாவில் தோன்றி பிளேக் நோய், கி.பி. 1348-1350 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பியாவில் இலட்சக்கணக்கானோரின் உயிரைக் குடித்தமையால் கறுப்பு மரணம் என்று அழைக்கப்பட்டது. (அ)



பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரெசெல்ஸ் நகரில் நடைபெற்று வரும் ஐரோப்பிய யூனியன் மாநாட்டில் ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கல் மற்றும் சைபீரிய ஜனாதிபதி நில்கோஸ் அனஸ்டாஸியடெஸ் சந்தித்து உரையாடுவதை படத்தில் காணலாம்.

# சீன பல்கலை. நுழைவு தேர்வில் ஆங்கில பாடம் நீக்கப்பட்டது

சீன பல்கலைக்கழகங்களில் நேற்று முன்தினம் நுழைவுத் தேர்வுகள் தொடங்கின. இதில் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் அறிவியல் மற்றும் பொறியியல் படிப்புக்காக விண்ணப்பித்துள்ள மாணவர்கள், கணிதம் மற்றும் இயற்பியல் தேர்வு களை மட்டும் எழுதினால் போதும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைப்பிரிவுகளுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கள் சீன மொழித்தேர்வு மற்றும் கணிதத் தேர்வுகளை எழுதினால் போதும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டாயமாக்கப்பட்ட பாடங்களில் இருந்து ஆங்கிலம் நீக்கப்பட்டுள்ளது. இதுபற்றி சிங்குவா பல்கலைக்கழக சேர்க்கை அதிகாரி கூறுகையில், மாணவர்களின் பணிச்சுமையை குறைப்பதற்காகவும் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பாடங்களில் அதிக கவனம் செலுத்தும் திறமையான மாணவர்களை ஈர்ப்பதற்காகவும் ஆங்கிலம் நீக்கப்பட்டுள்ளது என்றார்.


திறமையான மாணவர்களை அதிக அளவில் சேர்ப்பதற்கு அனுமதிக்கும் வகையில் பொதுத் தேர்வுகள் தொடங்குவதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் இதுபோன்ற நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

இந்த ஆண்டு 27 பல்கலைக் கழகங்கள் ஒரே சமயத்தில் இத் தேர்வை நடத்தியதாக தெரிய வருகின்றது குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒருநாள் கிரிக்கெட் போட்டி

# யாழ். இந்துவிடம் வீழ்ந்தது கொக்குவில் இந்து அணி









கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற ஒருநாள் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 41.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக பங்குஜன் 80 பந்துகளில் 64 ஓட்டங்களையும், ஆதித்தன் 30 பந்துகளில் 34 ஓட்டங்களையும், நிஷாந்தன் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பாக மதுஷன் 9 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், பானுகோபன் 9 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், றுக்ஸ்மன் 9 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 43.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக கல்கோவன் 88 பந்துகளை எதிர்கொண்டு 57 ஓட்டங்களையும், சுஜிதன் 57 பந்துகளை எதிர்கொண்டு 30 ஓட்டங்களையும், வாமணன் ஆட்டமிழக்காமல் 32 பந்துகளை எதிர்கொண்டு 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக சிலோஜன், பங்குஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக யாழ். இந்துக் கல்லூரியின் வாமணனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் பங்குஜனும், சிறந்த பந்துவீச்சாளராக யாழ். இந்துக் கல்லூரியின் மதுஷனும், சிறந்த களத்தடுப்பாளராக கொக்குவில்



இந்துக் கல்லூரியின் சத்தியனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இந்தியா முழு...

சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட தமிழர்கள் இன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐதராபாத்தின் மாதாபூரில் உள்ள ஹைடெக் சிட்டி என்ற இடத்தில் நேற்று ஒருநாள் உண்ணாவிரதப்போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் தமிழர்களுக்கு நேர்ந்த கொடுமைகளை, பிற மாநில மக்களும் அறிந்து கொள்ளும் வகையில், இந்தி, தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் துண்டுப்பிரசுரங்களை அச்சடித்தும் விநியோகித்தும் வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இந்த போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். (எ-8)

## அரசின் பரி...

பல்வேறு சக்தி வாய்ந்த நாடுகள் எங்களுக்கு எதிராகப் பேசி வந்த போதிலும் இலங்கைக்கு இந்த வெற்றி கிடைத்துள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் விடுதலைப் புலிகளுடனான மோதல் முடிபுக்கு வந்ததிலிருந்து, மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை எட்டியுள்ள முன்னேற்றத்தை, பாரபட்ச மற்றகண்ணோட்டம் கொண்ட அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் அமெரிக்கா அடுத்த வாரம் தீர்மானம் கொண்டுவரவுள்ள நிலையில், மனித உரிமைகள் தொடர்பான பரிசீலனை அறிக்கையை இலங்கை சமர்ப்பித்துள்ளது.

அமெரிக்கா கடந்தாண்டும் இந்தியாவின் ஆதரவோடு இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கும் தீர்மானத்தை கொண்டு வந்தது.

இந்நிலையில் ஐ.நா.மனித உரிமைக் கவுன்சிலில் உள்ள அனைத்து உறுப்பு நாடுகளின் பரிந்துரைகளையும் இலங்கை நிராகரித்துள்ளதற்கு ஜெனிவாவில் உள்ள அமெரிக்கப் பிரதிநிதி வருத்தம் தெரிவித்துள்ளார். (எ-8)

## ஐ.நாவின்...

கப் பிரதிநிதி, சர்வதேச சட்டதிட்டங்களுக்கமைய இலங்கை அரசு நடந்து கொள்ள வேண்டுமென குறிப்பிட்டார்.

மனிதவுரிமைகள் தொடர்பில், பொலிஸ் மற்றும் தேர்தல் ஆணைக்குழுக்களை இலங்கை அரசு உடனடியாக அமைக்க வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை கூட இலங்கை அரசு நிறைவேற்ற மறுப்பது பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளது.

இலங்கை அரசு இதனை விட பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். மனிதவுரிமைகள் மீளாய்வுக் கூட்டங்களின் சிபாரிசுகளையும், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளையும், அமுல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (எ-8)

## இறுதி ரவை முடியும்...

காலை வரை பாரிய மோதல் ஒன்று இடம் பெற்றது.

எமது இராணுவ வீரர்களும் உயிர்ப்பலியானார்கள். அது குறித்து யாரும் கதைக்கவில்லை. இந்தப் பகுதியில் மிகவும் நெருக்கமான நிலையிலேயே யுத்தம் நடைபெற்றது.

இதன்போது எவரும் சரணடையவில்லை. இரவு பகலாக 48 மணி நேரம் மோதல் இடம் பெற்றது. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் சரணடைவதும் கடினமானது. மோதலில் இறங்கிய பின்னர் அந்த வழியில் செல்வதும் கடினமானது. ஏனென்றால் எமது வீரர்களும் கொமாண்டோக்களும் ஒவ்வொரு இடத்திலும் நுழைந்திருந்தார்கள்.

இது அவ்வாறானதொரு மோதலாக இருந்தது. இந்த மோதலில் இருந்து விலகுவதற்கும் சரணடைவதற்கும் சந்தர்ப்பம் இருக்கவில்லை. அவர் சரணடைய வேண்டும் என்று இருந்தால் அதற்குப் பல சந்தர்ப்பங்கள் இருந்தன. இதன்போது வேறுயாரும் சரணடைய முயற்சிக்கவில்லை.

இந்த மோதலின் போது தீவிரவாதிகள் சுமார் 400 க்கும் மேல் உயிரிழந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் சரணடையும் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

இறுதிக்கட்டத்தின் போது, 14-ம் திகதி அளவில் 85 ஆயிரம் பொதுமக்கள் சரணடைந்திருந்தனர். முல்லைத்தீவு களப்புப் பகுதியிலிருந்து தப்பி வந்து சரணடைந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் தீவிரவாதக் குழுத்தலைவர்கள் இருப்பதாகத் தெரிவித்தனர். பிரபாகரன் இருப்பதாகக் கூறவில்லை. அதன் பின்னர் யாரும் சரணடையவில்லை என அவர் குறிப்பிட்டார்.

சர்வதேசத்தின் தலையீடு இந்தச் சந்தர்ப்பத்தில் இருந்ததா? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், மீண்டும் பொய் வழக்கில் சிக்கி சிறைச்சோறு சாப்பிடுவதற்கு நான் விரும்பவில்லை என்றார். மேலும், அது தொடர்பில் ஊடகங்களில் வெளியான தகவல்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நீங்கள் எதைக் கண்டீர்களோ, அதையேதான் நானும் காண்கிறேன் எனவும் கூறினார்.

தற்போது இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் நாடுகள், போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தன.

கடற்புலிகளை எதிர்கொள்வதற்கும், புலிகளின் கடல் கலன்களை அழிப்பதற்கும் ஆயுத விநியோகத்தை தடுப்பதற்கும் பாரியளவில் அந்த நாடுகள் உதவிகளை வழங்கியிருந்தன.

இந்த நாடுகளின் உதவி இல்லாமல், எமக்கு இந்த யுத்தத்தை வெல்வது கடினமாக இருந்திருக்கும். இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் பாரிய உதவியினால் தான் யுத்தத்தை வெற்றி கொள்ள முடிந்தது.

இலங்கை அரசு அவர்களை உரிய முறையில் கையாளத் தவறியமையால்தான் அந்த நாடுகள் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன எனவும் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (எ-8)

## அமெரிக்கா சமர்ப்...

ஜெனிவாவில் தற்போது இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 22-வது கூட்டத்தொடரில் இலங்கை மீதான பிரேரணையை அமெரிக்கா கடந்த வியாழக்கிழமை உத்தியோக பூர்வமாக சமர்ப்பித்துள்ளது.

முன்னர் சமர்ப்பித்திருந்த நகல் பிரேரணையில் குறிப்பிட்ட விடயங்களில் சிறுமாற்றம் செய்யப்பட்டு மென்போக்குத்தன்மை கொண்டதாகவே புதிய பிரேரணை வரைபை அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது.

இவ்வாறு திருத்தங்களுடன் சமர்ப்பித்துள்ள அமெரிக்க பிரேரணை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோக பூர்வ நிலைப்பாடு என்ன? அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணையை இந்தியா ஆதரிக்குமா? என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விளக்கமளித்துள்ளார். அவர் இது தொடர்பாக தெரிவித்தவை வருமாறு,

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மனதார வரவேற்கின்றது. இந்தப்பிரேரணை தோற்காது. நிச்சயம் வெற்றியடையும்.

இலங்கை அரசபடைகளால் மனித உரிமைகள் மீறல்கள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. மீறப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அமெரிக்கா சமர்ப்பித்துள் பிரேரணையானது இலங்கை அரசுமீது சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை வரவேற்றுள்ளது. அதை நடைமுறைப்படுத்தவும் ஆதரவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கை அரசின் பொறுப்புக் கூறலை அமெரிக்கா தனது பிரேரணையில் மீண்டும் எடுத்துக்கூறியுள்ளது. எனவே இதிலிருந்து இலங்கை அரசாங்கம் தப்பமுடியாது என்றார். (எ-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மகிந்த...

யும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்த வுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார ரீதியிலான உதவிகளை மேம்படுத்தல், பாதுகாப்பு ஒத்துழைப்பு உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் இவ் விஜயத்தின்போது கவனத்தில் கொள்ளப்பட உள்ளதாக அரச வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

அதேவேளை, இலங்கையில்மேலும் சில திட்டங்களில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பை சீனாவுக்கு வழங்கவுள்ள இலங்கை, இவ் விஜயத்தின்போது அது தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை ஜப்பான் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் காலை கொழும்பு திரும்பிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சீனாவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜிஜின்பிங்கை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதன் போது இலங்கையின் இறைமை மற்றும் பூகோள ஒருமைப்பாடு குறித்த விவகாரங்கள் குறித்த விவகாரங்களில் தொடர்ந்தும் ஆதரவு வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-8)



கல்வி மேம்பாட்டிற்குரியவை
போட்டோக் கொப்பி
இருபக்கம் : 2/= மட்டும்.
கலர்பிறிண்ட் : 10/= முதல்
யாழில் கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்
666, கே.கே.எஸ் வீதி, யாழ். 0771974875



## மணல் மண் வேண்டுமா?

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?

இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?

உங்கள் இடத்திற்கே கொண்டு வருகிறோம்.

**4 1/2 டிராக்டர் 20,500/=**

**தொடர்பு: ராம்**

**072 63 78 546**

(C-2521)


# கலைஞர் கருணாநிதி...

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி, இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்ற திருத்தத்தை அமெரிக்காவின் தீர்மானத்தில் கொண்டுவர வேண்டும்.

இலங்கைப் போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேச சுதந்திரமான விசாணைநடத்தப்படவேண்டும். இது தொடர்பாக பிரமருக்கும்கூட்டணித்தலைவர் சோனியாவிற்கும் கடிதம் எழுதியிருக்கின்றேன் என்றார்.

மேலும் எங்களுக்கும் இந்தக் கூட்டணிக்கும் உள்ள உறவு நீடிக்குமா என்பது சந்தேகம்: நீடிக்காது என்பது உறுதி என்றார். மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறினால் கூட்டணியில் இருந்து நிச்சயம் வெளியேறுவோம் என்றும் கூறினார். (எ-8)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.:021 222 8093
61,Kachcheri-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்) (2166)


## யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

தேசிய பாடசாலை

பணி நயந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆசிரியர் சேவையில் . . . .
யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
1996.04.02 – 1998.01.14
பலாலி ஆசிரியர் கலாசாலை
1998.01.15 – 1999.12.31
யா/வட.மத்திய மகளிர் கல்லூரி
2000.01.01 – 2000.12.31
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
2001.01.01. – 2013.03.18

சிரேஷ்ட ஆங்கில ஆசிரியை

**திருமதி. கனகாம்பிகை விக்னராஜா**

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆங்கில ஆசிரியை திருமதி.கனகாம்பிகை விக்னராஜா அவர்கள் 2013.03.18 ஆம் நாளுடன் பணி ஓய்வு பெறுகின்றார். கல்லூரி ஆங்கில மொழித்துறையின் அச்சாணியாக மாணவச் செல்வங்களின் மொழிவிருத்திக்கும் சாதனைகளுக்கும் அரும்பணியாற்றினார். அவர்தம் மகத்தான சேவையினை மனதாரப் பாராட்டுவதுடன் அவரது எதிர்காலம் சிறப்புற மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

- கல்லூரிச் சமூகமும் பணியாளர் பேரவையும் -

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**அருமைநாயகம் ஆமோஸ்**
(அன்ரனி மில் உரிமையாளர்)

கண்கள் நீர் சொரிய
நாம் கதிகலங்கி நின்ற போது
நிசப்தமாய் உன் வார்த்தைகள்
கரைந்து போன இந்நாளில்
ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்


மண்ணுலகில் 09.02.1951
விண்ணுலகில் 18.03.2006

ஆமோஸ் அரைக்கும் ஆலை,
தருமபுரம். (2179)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அமரர் பொன்னம்பலம் நடராசமணி



(அம்பாள் ஸ்ரோர்ஸ், முன்னாள் யமுனா ஏஜென்சி பிரபல காலி வர்த்தகரும், உரிமையாளரும்)

வேலணை மேற்கு 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் நடராசமணி 17.03.2013 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் ஞானசொரூபியின் அன்புக் கணவரும், சிவாஸ்கர் (பொறியியல் பீட 4-ம் வருட மாணவன் - பெரதேனியா), யமுனா (N.D.B வங்கி சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

566/1, கே.கே.எஸ் வீதி,
மனோகராச் சந்தி அருகாமை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(2184)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.பரந்தாமன் கஜேந்திரன்

எமது பாடசாலை விஞ்ஞான ஆசிரியரும். நாவற்காடு, அச்சுவேலியைச் சேர்ந்தவருமான திரு.பரந்தாமன் கஜேந்திரன் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி திரு.பி.சிவகுமார் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவரது சேவை நலன் பெற நாம் பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்,
புத்தூர்.

பாடசாலை ஆசிரியர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.